www.padippakam.com

# சிந்தனை

பங்குனி — — வைகாசி

**SINTHANAI 2/90 March - May 1990**



படிப்பகம்

www.padippakam.com

# சமூக கூம்பகத்தின் உச்சியில்....

## 88 கோடீஸ்வரர்கள் இலங்கையில் உள்ளனர் லட்சாதிபதிகள் 134 பேர்

இலங்கையில் ரூபா ஒரு கோடிக்கும் அதிகமாக வருமானம் பெறுவோர் 88 பேர் என்றும் ரூபா லட்சத்துக்கும் ரூபா 50 லட்சத்திற்குமிடையிலான வருமானம் பெறுவோர் எண்ணிக்கை 134 என்றும் 1989 மார்ச் 31 வரையிலான 1988 உள்நாட்டு இறைவரி ஆண்டறிக்கை தெரிவித்துள்ளது.

இதே ஆண்டறிக்கையின்படி 698 பதிவான வரி செலுத்தும் நிறுவனங்களில் 199 நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ரூபா 50 லட்சத்திற்கும் அதிக வருமானம் பெறுபவை என்றும் அவற்றின் 1988 இன் மொத்த வருமானம் ரூபா 291 கோடியே 30 லட்சமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருமானத்தில் ரூபா 1116 கோடி 70 லட்சம் வரியாக இந்த நிறுவனங்களால் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 185 நிறுவனங்கள் தவா ரூபா 10 லட்சத்துக்கும் ரூபா 50 லட்சத்திற்குமிடையிலான வருமானம் பெறுபவை என்றும் அவற்றின் 1988 வருமானம் ரூபா 357 கோடி 40 லட்சம் என்றும் அதில் ரூபா 140 கோடி வரியாகச் செலுத்தப்பட்டது எனவும் அறிக்கை தெரிவித்தது.

நாட்டில் வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 1 லட்சத்து 43 ஆயிரத்து 665 எனவும், உழைக்கும் போதே வரி செலுத்துவோர் 69 ஆயிரத்து 716 பேர் எனவும் விற்பனவு வரி செலுத்துவோர் 97 ஆயிரத்து 587 பேர் எனவும் அறிக்கை தெரிவித்துள்ளது.

***நன்றி:வீரகேசரி***

(குறிப்பு: இலங்கையின் மொத்தசனத்தொகை- 161 லட்சம்)

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

தேயிலையின்
துளிர்கள்
கவ்வாத்துச் செய்யப்படும்
எங்களின்
கனவுகள் போலவே....




எங்கள்
சுறுசுறுப்பைப் பற்றி
வியர்வை
உடலெங்கும்
எழுதியிருக்கும்
கவிதையாகவே....

எங்களின்
சிறுசுகள்
கணக்கெழுதிப் படிக்கும்
வயன்களின் சுவர்களில்....

கூடைக்குள் கொழுந்தும்
குடிசையில் குழந்தையும்
வாடும்
நேரங்கள்
அவர்களால் திருடப்படுவதால்....

எங்கள்
இரத்தம் ஏற்றுமதியாகும்
ஆனால்
பெயர்தான்
தேயிலை என்றிருக்கும்!

– தாம்ஷேவர் ஜொதிந்ஜொர்



www.padippakam.com





நாம் வாழும் இந்த வர்க்க சமுதாயத்தில் காணப்படும் பெண் ஒடுக்குமுறைக்கான சித்தாந்த ரீதியான தேடலையும் அது தொடர்பான கலந்துரையாடல்களையும் உருவாக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். பெண் ஒடுக்குமுறையை ஒவ்வொருவரும் தாம்சார்ந்த வர்க்க நிலைப்பாடுகளிலிருந்து நோக்குவது வழமையாகும் - நாமும் இந்தக் கட்டுரையில் மார்க்சியக் கண்ணோட்டத்துடன் இப்பிரச்சனையை நோக்குவது தவிர்க்க முடியாததாகிறது.

## பால்ரீதியான தொழில்பிரிவு

எமது சமுதாயத்தில் காணப்படும் பெண் ஒடுக்குமுறையானது, பெண்களுக்கு இயற்கையாகவே அமைந்த பிள்ளை பெறுதல், அவர்களைப் பராமரித்தல் போன்ற பால்ரீதியான தொழில் பிரிவினால் ஏற்பட்டது என்ற கருத்து பரவலாகவே காணப்படுகின்றது.

# பெண்ஒடுக்குமுறை



படிப்பகம்

www.padippakam.com

## பெண் ஒடுக்குமுறையின் ஆரம்பம்

வளர்ச்சியடையாத வறுமை மிக்க ஆதிகாலத்தில் இயற்கையாக அமைந்த தாய்வழிக்குழுக்களின் தலைமையானது காலப் போக்கில் ஏற்பட்ட உற்பத்தி வளர்ச்சி முறைகளினால் தந்தைவழிக் குடும்ப முறையாக மாறியது. தனி மனிதர்கள் தமது தேவைக்கே உற்பத்தி செய்ய முடியாத நிலமைகளிலிருந்து தமது தேவைகளுக்குமதிகமாகன (உபரி) உற்பத்தியை செய்யக் கூடிய ஆயுதங்களைக் கண்டு பிடித்ததும், மிருகங்களைக் கட்டி வளர்க்க ஆரம்பித்ததும், இந்த மேலதிக உற்பத்திக்கு வழிவகுத்தது. இந்த வளர்ச்சிக் காலத்தில் இயற்கையான பிள்ளைப்பேறு, பராமரித்தல் போன்ற காரணங்களினால் தொடர்ச்சியாக உற்பத்தியில் ஈடுபட முடியாதிருந்த பெண்களிடம் குறைவான உபரி உற்பத்தியும், தொடர்ச்சியாக உற்பத்தியில் ஈடுபட்ட ஆண்களிடம் அதிக உற்பத்தியும் குவிய ஆரம்பித்தது. குவிந்த தனிச் சொத்துக்களை பராமரிக்கவும் தமது சந்ததிகளுக்கு உரியதாக்கவும் ஆணாதிக்கக் குடும்ப முறை உருவாகியது. இந்த அடிப்படையில் பெண் ஒடுக்கு முறைக்கான காரணம்



# ஒரு சித்தாந்தத்திற்கான தேடல்

- பரா -





சமுகத்தில் உள்ள பால்ரீதியான தொழில் பிரிவுதான் என்ற நிலைப்பாடு உருவாகியுள்ளது.

பால்ரீதியான தொழில் பிரிவினால் ஏற்பட்ட பெண் ஒடுக்கு முறையும், ஆணாதிக்கக் குடும்பமும் சமுகத்தில் காணப்படும் ஒடுக்கு முறைகளுக்கு சமனாக அமைகின்றன என்ற கருத்துக்களையும் ஆரம்ப மார்க்சிய எழுத்துக்களில் காண்கிறோம். இன்றைய சமுதாயத்தில் "குடும்பம் ஒரு பொருளாதார அலகு"(ஏங்கல்ஸ்), "குடும்பத்தில் கணவன் முதலாளி, மனைவி தொழிலாளி"(ஏங்கல்ஸ்), "குடும்பங்களில் காணப்படும் அடிமைத்தனமே சமுதாயத்திற்கும் விரிகிறது"(மார்க்ஸ்) என்ற வாசகங்கள் பால்ரீதியான தொழில்பிரிவையும் பெண் ஒடுக்கு முறையையும் இணைக்கும் பார்வையாக இருக்கின்றது.

## இருவிதமான ஒடுக்குமுறைகள்

பெண் என்பவள் பிள்ளைகளை பெற வேண்டியவள், வளர்க்க வேண்டியவள், வீட்டு வேலைகளைச்

www.padippakam.com

செய்ய வேண்டியவள் என குடும்பத்தினுள்- வீட்டினுள் அடைக்கப்பட்டு, சமூக உற்பத்தியிலிருந்து படிப்படியாக அன்னியமாக்கப்பட்டு, ஆண்களில் பொருளாதார ரீதியாக தங்கியிருக்கச் செய்யப்பட்டதனால் அதன் விளைவான மற்றைய ஒடுக்கு முறைகளும் தொடர்கின்றன. இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் குடும்பங்களுக்குள் நடைபெறும் பெண் ஒடுக்கு முறையும், உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்கள் மீதான ஒடுக்கு முறைகளும் வேறாகவே நோக்கப்படுகின்றன. பால்ரீதியான பெண் ஒடுக்கு முறையும், வர்க்க ஒடுக்கு முறையும் இருவேறு ஒடுக்கு முறைகளாகக் கருதப்படுகின்றன. இந்த நிலைப்பாட்டின் பிரகாரம் இரண்டு விதமான சமூகப் போராட்டங்கள் மனிதவரலாற்று வளர்ச்சியில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒன்று ஆண், பெண் இரு பாலர்களுக்கிடையிலான குடும்ப மேலாதிக்கத்திற்கான போராட்டம். மற்றையது வர்க்கங்களுக்கிடையிலான போராட்டம். இவ்வாறு பெண் ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தையும் வர்க்கப்போராட்டத்தையும் வேறுபடுத்திப் பார்க்கும் வழக்கம் பல தூய பெண் நிலைவாதிகள் மத்தியில் காணக் கூடியதாகவும் உள்ளது.

இந்த நிலைப்பாடு விமர்சனத்துள்ளாக்கப்பட வேண்டியதாகவே உள்ளது.

சொத்துரிமையைப் பாதுகாப்பதற்கும் அந்த உடமைகளைச் சந்ததிகளுக்குக் கொடுப்பதற்கும் பெண் ஒடுக்கு முறையும் அதன் அடிப்படையிலான குடும்ப முறையும் செயற்படுத்தப்படுத்தப்படுகின்றன, என்பது சொத்துரிமையுடைய வர்க்கங்களுக்குப் பொருந்துகின்றது. ஆனால் சொத்துரிமையற்ற பாட்டாளி வர்க்கக் குடும்பங்களினுள் நடைபெறும் ஆணாதிக்கத்திற்கும் பெண் ஒடுக்கு முறைக்கும் இந்த நிலைப்பாட்டின் படி விளக்கமில்லாது இருக்கிறது. ஆகையினால் சொத்துரிமையை சந்ததிகளுக்குக் கொடுப்பதற்காக மட்டும் குடும்ப முறையும் அதனுடன் கூடிய பெண் ஒடுக்கு முறையும் வர்க்க சமுதாயத்தில் பேணப்படுகிறது என்பது முழுமையானதாகத் தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

பெண்கள் சமூகபொருள் உற்பத்தியில் "ஈடுபடாமல்" வைக்கப்பட்டிருந்தாலும், அவர்களின் உழைப்பு அவசியமாகும் காலங்களில் (அதிக இலாபம் கிடைக்கும் பொழுது அல்லது போர் காலங்கள்) பெண்கள் அதிகமாக சமூகப் பொருள் உற்பத்தியில் "ஈடுபட" வைக்கப்படுகின்றனர் எனக்கூறப்படுகிறது. ஆனால் சமூக பொருள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்கள் என்ற முறையில் ஆண் தொழிலாளர்களுக்குச் சமமான கூலியையோ அல்லது உரிமைகளையோ பெறமுடியாத வகையில் பெண் ஒடுக்குமுறை தொழில் நிலையங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மறு புறத்தில் பால்ரீதியான தடைகளையும் தாண்டி - விவாகம் செய்யாமல், பிள்ளைகளைப் பெறாமல் - உற்பத்தித் தொழில்களில் ஈடுபடும் பெண்கள் மீதும் ( அப் பெண்களின் தொழிற்சாலை உழைப்பு அவசியமற்றதாகும் போது) ஆணாதிக்கத்தின் அடிப்படையிலான காலாசார மற்றும் சட்டரீதியான பெண் ஒடுக்கு முறைகள் சமூகத்தில் நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

இது, வர்க்க சமுதாயத்தில் பெண் ஒடுக்கு முறை என்பது தனிக் குடும்பங்களுக்குள் மட்டுப்படுத்தப்படமால், சமூகரீதியாக ஊக்குவிக்கப்படும் ஆணாதிக்கத்தினால் - பொருளாதாரம், சட்டம், காலாசாரம்... - பொதுவாக சமூகத்தின் சகல பகுதிகளிலும் செயற்படுத்தப் படுகிறது என்பதும் தெளிவாகிறது.

இதற்கான காரணியை, வர்க்க சமுதாயத்தின் செயற்பாட்டிற்கு அத்தியாவசியமான உழைப்பாளிகளின் உபரி உற்பத்தியின் சுரண்டலின் அடிப்படையிலேயே ஆராய வேண்டியுள்ளது.

## முதலாளித்துவச் சுரண்டல்

முன்னைய சமுதாய அமைப்புக்களில் உழைப்பாளிகள் சுரண்டப்பட்டது போலவே முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முறையிலும் சுரண்டப்படுகிறார்கள். ஒரு



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளி, தானும் தன் குடும்பமும் உயிர் வாழ்வதற்கு அவசியமான பணத்தைப் பெறுவதற்கு தன் உழைப்புச் சக்தியை உற்பத்தி சாதனங்களை வைத்திருக்கும் முதலாளிக்கு விற்க வேண்டியுள்ளது. அவனது தொழிற்சக்தியை முதலாளி, ஒரு குறிப்பிட்ட நாள் கூலிக்கு வாங்குகின்றான். தொழிலாளி தனது வேலையை ஆரம்பித்து சில மணி நேரத்தில் தனது கூலிப் பணத்திற்கு சமனான மதிப்புள்ள வேலையை (பொருள் உற்பத்தியை) செய்து முடிக்கிறான். இத்துடன் தொழிலாளி தனது வேலையை நிறுத்திக் கொண்டால், முதலாளி எந்த விதமான மேலதிகமான உபரி மதிப்பையும் தொழிலாளியின் உழைப்பினால் பெறமாட்டான். முதலாளி தொழிலாளியின் உழைப்புச்சக்தியை விலைக்கு வாங்கியது மேலதிக (உபரி) உழைப்பைப் பெறுவதற்கேயாகும். தொழிலாளி தொடர்ந்து வேலை செய்வதனால் தனக்குக் கொடுக்கப்பட்ட கூலியிலும் பார்க்க அதிகமான (உபரி) மதிப்பை உண்டாக்குகிறான். இதுவே கூலி கொடுக்கும் முதலாளி அவனிடமிருந்து சுரண்டும் மேலதிக உழைப்பாகும்.





படிப்பகம்

www.padippakam.com

உதாரணமாக, பத்து மணித்தியாலம் வேலை செய்யும் ஒரு தொழிலாளி, ஆறு மணித்தியாலத்தில் தானும் தன் குடும்பமும் உயிர் வாழ்வதற்கு தேவையான கூலிப்பணத்திற்குரிய வேலையை செய்து முடித்து விடுகிறான் என வைத்துக் கொள்வோம். இது அவசியமான உழைப்பு எனப்படும். இதன் பின் அவன் தன் தொழிற்சக்தியினால் உற்பத்தியாக்கும் உபரி உற்பத்தி முதலாளிக்கு இலாபமாகப் போய்ச் சேர்கிறது.


ஒரு தொழிலாளி உற்பத்தி செய்யும் பொருளின் மதிப்பு (முதலாளி பெறும் மதிப்பு), அந்தத் தொழிலாளி உயிர் வாழ்வதற்கு அவசியமான பொருட்களின் மதிப்பிலும் ( தொழிலாளியின் கூலியிலும்) பார்க்க அதிகமானதாகும். இவ்வாறு தொழிலாளியின் மேலதிக உழைப்பிலிருந்து பெறப்படும் செல்வமே முதலாளியின் மூலதனத்தை மேலும் பெருக்க வழி செய்கிறது. இதுவே முதலாளித்துவச் சுரண்டலாகும்.

# தொழிற்சக்தியின் மறுஉற்பத்தி

தொழிலாளிக்குக் கொடுக்கப்பட்ட கூலியானது அவனது தொழிற்சக்தியை மறு உற்பத்தி செய்வதற்கான பணம் என்பது தெளிவாகிறது. கூலியாகப் பெறும் பணத்தைக் கொண்டு தொழிலாளி தனக்கும் தனது குடும்பத்திற்கும் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வாங்கிப் பாவித்து மறு நாள் வேலைக்குச் செல்லுகிறான். ஆனால் அவன் கடையில் வாங்கும் அரிசி, பருப்பு, இறைச்சி ஆகியவை தாமாக உண்ணப்படக் கூடிய உணவாக மாறுவதில்லை. அவற்றின் மீது தொழிற் சக்தி பிரயோகிக்கப்பட்டு - ஒருவர் வேலையில் ஈடுபடுவதன் மூலமே உணவு தயாரிக்கப்படுகின்றது. இதற்கு உழைப்புத் தேவைப்படுகின்றது. தொழிலாளியினுடைய அல்லது அவனது குடும்பத்திலுள்ள ஒருவரின் - மனைவி, தாய், சகோதரி - உழைப்பின் மூலமே இதைச் சாதிக்க



படிப்பகம்



முடிகிறது. இங்கு குறிப்பிட்ட உணவு சமைக்கும் வேலை மட்டுமல்லாது துணிதுவைத்தல், துப்பரவு செய்தல், ஆடைதிருத்துதல் போன்ற பல வீட்டு வேலைகளும், ஒரு தொழிலாளியைப் வீட்டில் பராமரித்து மறு நாள் வேலைக்குச் செல்ல உதவும் - தொழிற் சக்தியை மறு உற்பத்தி செய்யும் - உழைப்பாக அமைகின்றன.

ஒரு தொழிலாளியின் கூலியை - வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் - நிர்ணயிக்கும் பொழுது வீட்டில் நடை பெறும் இந்த உழைப்புக்கான கூலி முதலாளிகளினால் கணக்கில் எடுக்கப்படுவதில்லை.

தொழிற்சாலையில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் களைப்படைகிறார்கள்,

முதுமையடைகிறார்கள், நோய்வாய்ப்படுகிறார்கள், இறந்து விடுகிறார்கள்.

தொழிலாளர்களின் உபரி உழைப்பினால் இலாபமடையும் முதலாளிகளுக்கு தொழிற்சக்தியை விற்கும் தொழிலாளர்கள் தொடர்ச்சியாகத் தேவைப் படுகிறார்கள். களைப்படையும், நோய்வாய்ப்படும் தொழிலாளர்கள் வீடுகளில் பராமரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமல்ல. முதுமையடைந்து இறந்து விடும் தொழிலாளர்களுக்குப் பதிலாக புதிய உழைப்பாளிகளின் சந்ததிகளை உருவாக்க வேண்டியது முதலாளித்துவத்திற்கு மிக மிக அவசியமாகிறது.

இதுவே தொழிற்சக்தியின் சமூக மறு உற்பத்தியாகும். இந்த தொழிற்சக்தியின் மறுஉற்பத்திக்கு அவசியமான செயற்பாடுகள் எல்லாம் தொழிலாளர்களின் குடும்பங்களிலேயே - தொழிலாள வர்க்கப் பெண்களின் உழைப்பினால் - நடைபெறுகின்றன.

தொழிலாளர்களின் பராமரிப்பைக் கூட பெண்களின் உதவியில்லாமல் - தொழிலாளர்கள் விடுதிகள், மற்றைய வசதிகள் மூலமாக - செய்தாலும், புதிய தொழிலாளர்களை பெற்றெடுப்பதில் பெண்களின் பங்கு இன்றியமையாததாகவே இருக்கின்றது.

குடும்ப அமைப்புக்களுக்கு வெளியில் தொழிலாளர்களின் பராமரிப்புகளைச் செய்யும் பொழுது, முதலாளிகள் தமது இலாபத்தில் ஒரு பகுதியை அதற்காகச் செலவு செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இந்தப் பராமரிப்பு ஆணாதிக்கம் பேணப்படும் குடும்பங்களில் செய்யப்படும் பொழுது, எந்த விதமான கூலியுமில்லாமல் பெண்களினால் செய்யப்படுகின்றன.

தொழிற்சக்தியின் சமூகரீதியான மறுஉற்பத்தியில் மிக முக்கியமான, உழைப்பாளிகளின் சந்ததி உற்பத்தி, பிள்ளைகளின் பராமரிப்பு ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணாதிக்கமுள்ள குடும்ப முறை முதலாளித்துவச் சாண்டனுக்கு அத்தியாவசியமாகவுள்ளது.

இவ்வாறு ஆணாதிக்கம், புறரீதியாகவும் அகரீதியாகவும் ஆண்கள் மத்தியில், முதலாளித்துவ

www.padippakam.com



நலன்களுக்காக வளர்க்கப்பட்டுகின்றது. அதே நலன்களுக்காக பெண் ஒடுக்கு முறை பேணப்படுகின்றது.

சொத்துரிமையுள்ள வர்க்கங்களில் சொத்துரிமையை சந்ததிக்கு கொடுக்கும் முறையில் ஆணாதிக்கம் பேணப்படுகிறது. மறுபுறத்தில் பெரும்பான்மையான உழைப்பாளிகளைக் கொண்ட இந்த சமூக அமைப்பில் தொழிற்சக்தியை மறுஉற்பத்தி செய்வதற்காக பெண் ஒடுக்கு முறையை அடிப்படையாகக் கொண்ட குடும்ப முறையை சமூக அமைப்புக்கள் நடைமுறைப் படுத்துகின்றன.

பெண்ணின், சந்ததியை உருவாக்கும் சேவை - முதலாளித்துவத்திற்கு தொழிற் சக்தியை மறு உற்பத்தி செய்யும் சேவை - பாதுகாக்கப் படுவதற்காக பல் வேறு சட்டங்கள் அமுல் நடத்தப் படுகின்றன. பெண்ணின் பிள்ளைப் பேறு காலங்களில் பராமரிப்பு, கணவன் பிள்ளைப் பராமரிப்புக்கு கட்டாயமாகப் பணம் கொடுக்க வேண்டுமென்ற சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. சமூக உற்பத்தியில் ஈடுபடாமல் பெண்ணானவள் குழந்தைகளை வளர்ப்பதில் ஈடுபட வேண்டுமென்பதை இது ஆணாதிக்க ரீதியாக வலியுறுத்துகிறது. பெண்களின் கூலியற்ற உழைப்பின் மூலம் புதிய தொழிலாளிகளை முதலாளித்துவத்திற்கு உருவாக்க வேண்டிய சகல சட்டரீதியான, கலாசார ரீதியான விதிமுறைகள் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. களைப்படைந்த தொழிலாளி, வயோதிபர், நோய்வாய்ப்பட்டவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியோர்களை பராமரிப்பதற்கு தமது இலாபங்களைச் செலவளிக்க முதலாளிகள் (முதலாளிததுவ அரககள்) விரும்புவதில்லை. ஆணாதிக்கமும் பெண் ஒடுக்டுமுறையும் நிலவும், கலாசார மற்றும் சட்டங்களினால் அமுல் நடத்தப்படும் குடும்பங்களில் பெண்களின்இலவச உழைப்பினால் முதலாளிகள் (அரககள்) மேற் கூறிய சேவைகளைப் பெறுகின்றனர்.

இவ்வாறு சமூகத்தில், குடும்பங்களுக்குள் பெண்களினால் இலவசமாகச் செய்யப்படும் தொழிற்சக்தியின் மறுஉற்பத்தியே(சமூக மறுஉற்பத்தி) பெண் ஒடுக்குமுறையின் அடிப்படையாக அமைகிறது.

இந்த சமூகமறுஉற்பத்தியின் அடிப்படையிலான சித்தாந்தக் கண்ணோட்டம், வர்க்க சமுதாயத்தில் பெண்ஒடுக்குமுறைக்கான ஒரு சித்தாந்த தளத்தை அடைய எமக்கு உதவுகிறது. இது தொழில் செய்யும் பெண்களின் ஒடுக்கு முறையை மட்டுமல்லாது, சகல தொழிலாள வர்க்கப் பெண்களின் ஒடுக்குமுறையையும் விளக்கக் கூடியதாகவே உள்ளது.

பெண் ஒடுக்கு முறைபற்றிய கருத்துக்கள் மேலும் பரிமாறிக் கொள்ளப்படும் பொழுது, எமது சிந்தனைகள் தெளிவு பெறலாம்.


சிந்தனை

ஆரம்பம் 1985

ஆறு இதழ்களுக்கான வருடசந்தா 20 டி.எம். கீழ்கண்ட விலாசத்திற்கு 1 டி.எம். முத்திரைகளாகவோ அல்லது வங்கிகணக்கிற்கு அனுப்பிவைக்கலாம்.

**BANK : Landesgirokasse, Stuttgart**
**Konto Nr : 3403185**
**Bankleitzahl: 600 501 01**

**SINTHANAI**
**ALBUCHWEG 8**
**7000 STUTTGART 1**




படிப்பகம்

www.padippakam.com

# முக்காடு

—ஜிக்கு பாக்கியநாதன்—

அடக்கம் என்ற முக்காடு
அழகாப் பெண் சிரசினிலே
சரி செய்யப்படுகின்றது.
முக்காட்டின் விளிம்புகளில்
சரிகை வேலைப்பாடுகள் போல்
பெண்ணுக்கு மேலும் திணிக்கப்படும்
அடக்கத்தின் இலக்கணங்கள்.
அடக்கம் என்ற திரையைப் போட்டு
ஆமையைப் போன்றே
தலையையும் முகத்தையும்
உள்ளே இழுத்துவிட வேண்டுமாம்.
ஆமையின் தன்மையினைப் போல்
இன்னும் பெண் வெளியில் தலை நீட்டாது
வீட்டுக்குள்.... ஆமை ஓட்டுக்குள்
அடங்கிட நியதியோ?
முக்காட்டின் சரிகை வேலைப்பாடு
பெண் சுதந்திரத்தை
முடக்கி மூடிவிடும் அலங்காரமா?
முகமலர் மறைத்திடும் – வெளி
முக்காடு எதற்கு?
உள்ளிதய மலருக்கு
உணர்வுக் கொந்தளிப்புகளுக்கு
போட முடியுமோ முக்காடு?



படிப்பகம்

www.padippakam.com

# மார்ச் 8

வி.ஏ.கந்தசாமி

மார்ச் மாதம் எட்டாம் திகதி. சர்வதேச மாதர் தினம். இத்தினத்தில் உலகளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறும். இவற்றில் சில சம்பிரதாய ரீதியிலும், பல நாடுகளில் போராட்ட ரீதியான கோரிக்கைகளை முன் வைத்தும் ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும் இடம் பெறலாம். ஆயினும் மனித சமுதாயத்தின் முன் உள்ள பிரச்சனை மாதர்களை நாம் சமத்துவ ஜனநாயக உரிமை உள்ள எமது சகபாடிகளாக நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா இல்லையா என்பதே. இதற்கு இன்னமும் இல்லை என்பதுதான் பதிலாக அமையலாம்.

'தாய் இல்லாமல் நாம் இல்லை'என ஒவ்வொரு ஆண் மகனும் உணர்ந்தோ, உணராமலோ தாய்குலமே என பெருமையாக அழைக்கிறோம். ஆனால் பெண்ணினத்தை நாம் தெய்வப் பிறவிகளாக ஒரு பக்கம் ஏற்றி வைக்கிறோம். அல்லது அடிமைகளாக மறு பக்கம் தாழ்த்தி வைக்கிறோம்.

இந்த நிலை மாற வேண்டும். ஆணுக்கு இருக்கும் அத்தனை ஜனநாயக உரிமைகளும் பெண்களுக்கும் இருக்க வேண்டும், இதுவே மனித நேயமிக்க கருத்தாகும்.

உலகத்திலே முதன் முதல் பெண்ணை பிரதமராக தோற்றுவித்த நாடு இலங்கை. அதை தொடர்ந்து இஸ்ரேலிலும், இந்தியாவிலும், பிரிட்டனிலும், பிலிப்பைன்சிலும், இன்று மொட்டாக்குக்குள் பெண்களை மறைத்து வைக்கும் இஸ்லாமிய நாடான பாக்கிஸ்தானிலும் கூட பெண் பிரதமர் ஒருவர் அதிகாரத்தில் இருக்கிறார். இதனால் எல்லாம் பெண்களின் சமத்துவ ஜனநாயக உரிமைகள் நிலை நிறுத்தப்பட ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லவே இல்லை. பெண்கள் விடுதலை என்பது அடிப்படையில் சமுதாயத்துடன் சம்பந்தப்பட்ட ஒரு சமுதாயப்



படிப்பகம்

www.padippakam.com

பிரச்சனை. எப்படி ஒரு நாட்டிற்கு தேசிய விடுதலை அவசியமோ, எப்படி தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கு சமூக விடுதலை அவசியமோ, எப்படி அடக்கி ஒடுக்கப்படும் தேசிய இனத்திற்கு இன விடுதலை அவசியமோ, அதே போல சமூகத்தில் பின் தள்ளப்பட்ட, பல்வேறு விதத்தில் அடக்கி வைக்கப்பட்டுள்ள பெண்ணினத்தின் விடுதலை என்பதும் தவிர்க்க முடியத ஒரு தேவையாகும்.

'பெண்புத்தி பின்புத்தி' என்றும் 'அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு'என்றும் பெண்களை பின் தள்ளி வைத்த பெருமை ஆண் சமுதாயாத்தையே சேரும். இது இன்று நேற்றல்ல பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக பல்வேறு சமுதாய அமைப்புகள் ஊடாக ஆணாதிக்கம், மத ஆதிக்கம், பொருளாதார ஆதிக்கம் என்பவற்றால் பெண்கள் விலங்கிடப்பட்டு அடிமைகளாக்கப்பட்ட வரலாறு அனைத்து நாடுகளிலும் பரவி இருப்பதை நாம் காணமுடிகிறது. ஒரு நாட்டில் சிறிய காலணிகளை சிறுவயதிலிருந்து பெண்களை அணியச்செய்து கீழ்மைப்படுத்தினார்கள். இன்னொரு நாட்டில் மரித்த கணவனுடன் உடன்கட்டை ஏறுதல், பால்ய விவாகம், விதவைகள் மறுமணம் செய்ய மறுப்பு ஆகியவற்றினால் ஆண்களின் அந்தப்புர சொத்தாக பெண்கள் மாற்றப்பட்டார்கள். இன்னொரு சமுதாயத்தில் ஆண்களுக்கு பலதார மணத்துக்கு சட்டரீதியாக உத்தரவாதம் அளித்து பெண்களுக்கு கறுப்பு முக மறைப்பால் அவர்களின் ஆசாபாசத்தை தமது தனிச் சொத்தாக்கினார்கள் ஆண்கள். இவைகள் எல்லாம் எமது மத கலாசாரத்தின் துணையுடனும், பொருளாதார ஆதிக்கம் பெற்ற ஆணாதிக்கத்தினாலும், சமுதாயத்தில் பெண்கள் ஆண்களின் சொத்துடமை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். விபச்சாரத்தை கலாசாரமாக வளர்த்தெடுத்து வரும் மேற்கத்திய நாட்டில் பெண்கள், காமகளியாட்ட பொருளாகவும், தினமும் அனுபவித்து தூக்கி வீசும் பண்டமாகவும் பெண்கள் ஆக்கப்பட்டு வருகின்றார்கள்.

இன்று கல்யாணச் சந்தையில் எடை குறைந்த நாணயமற்ற விற்பனை பண்டமாக பெண்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். இலங்கை,



படிப்பகம்

இந்தியா போன்ற நாடுகளில் சீதனம் அல்லது வரதட்சணை என்பது கல்யாணச் சந்தையில் நிறுக்கப்படும் நிறுவைத்தட்டில் எடை குறைந்த பொருளாக பெண்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். அதனால் தங்கத்தாலும், நிலப்புலங்களாலும், இலட்சக் கணக்கான ரூபாய் நோட்டுக்களாலும், வீடு வாசல், வாகன வசதிகள் ஆகியவற்றை மணமகளின் தட்டில் நிறைத்தால்தான் படிப்பு, பட்டம், பதவி பெற்ற மாப்பிள்ளையோடு தராசின் தட்டு சமத்துவ நிலை நாட்டப்பட முடியாது.இந்த வகையில் பெண்நிலைவாதம் என்ற பெண் விடுதலை பற்றி பேசும் தகமை பெற்றவர்கள் இந்த உயர் வர்க்கம் பெண்கள் தான் என்பது இது ஒரு வேடிக்கையான சம்பவமாகும்.

பெண் நிலை வாதம் என்று இவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்களோ தெரியவில்லை. ஆனால் பெண்கள் எந்தெந்த வகையில் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை இவர்களால் இன்னும் சமுதாயத்தின் முன் வைக்க முடியவில்லை. அது மட்டுமல்லாமல் பெண்கள் விடுதலையின் உந்து சக்தியான உழைக்கும் பெண் குலத்தின் மத்தியில் கீழ் இறங்கி வேலை செய்யவோ அவர்கள் பிரச்சனைகளை முன்னுக்கு கொண்டு வரவோ எதுவும் செய்வதாய் தெரியவில்லை. ஓய்வு நேரக் கருத்தரங்குகளும்,சில "பெண்ணின் குரல்" பத்திரிகைகள் மட்டும் பெண் விடுதலையைக் கொண்டு வரப் போதுமானதல்ல. மலையகத் தோட்டங்களில் காலை முதல் மாலை வரை வேலை செய்யும் மலையகப் பெண் பாட்டாளிகளைப் பற்றியோ,சுதந்திர வர்த்தக வலையம் என்று பெயர் சூட்டப்பட்ட அன்னிய பண ஆதிக்க முகாம்களில் எந்தவித தொழிற்சங்கம் தொடங்க அனுமதிக்க முடியாத,இயந்திரங்களின் வேகத்துக்கு இயங்கும் இயந்திரத்தின் உறுப்புகளாகவே மாறிவிட்ட பெண்களைப் பற்றியோ,ஆலைகளிலும்,வர்த்தக நிலையங்களிலும்,காரியாலயங்களிலும்,ஏன் கல்விச் சாலைகளிலும் பணிபுரியும் பெண்கள் பற்றியோ,இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு கிராமியக் கூலிகளாக வந்த மலையகப் பெண்கள்

www.padippakam.com

கல்லுடைப்பதிலும்,அரிசி ஆலைகளிலும் காலை முதல் மாலை வரை வேலை செய்யும் பெண்கள் அவலங்கள் பற்றியோ,எந்தவித அக்கறையும் எடுக்காது பெண் நிலைவாதம் பேசுவது மட்டும் பெண்கள் விடுதலையடையும் மார்க்கத்தை காட்டப்போதுமானதல்ல.பெண்களை அணிதிரட்டி பேரியக்கமாக பெண்கள் விடுதலை இயக்கமாக மாற்றாதவரை பெண் விடுதலை என்பது "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாத" கதையாகவே முடிந்துவிடும்.

சர்வதேச மாதர் தினம் மாதர் குலத்தின் மறு மலர்ச்சிக்கு வழி திறந்து விட வேண்டும்."யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலகம் பரந்த நோக்கில் பெண்கள் விடுதலை பற்றிய விடயத்தை நாம் நோக்க வேண்டும். ஒரு சில சோசலிஷநாடுகளில் கூட பெண்கள் வியாபார விளம்பர பொருளாக ஆக்கப்பட்டுள்ள வர்த்தக நோக்கும் ஆணாதிக்கமும் படிப்படியாக மேலோங்கி வருவதும்,பெண்ணாக குழந்தை பிறந்த குற்றத்திற்காக கொல்லப்படும் மூடக் கொள்கைகளும் மேலோங்கி வருவது மாதர் விடுதலை பற்றிய ஆழ அகலத்தை எடுத்துக் காட்டப்போதுமானது. சீதனக் கொடுமையாலும்,குடும்ப பொருளாதார நெருக்கடியாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப்பணியாட்களாக சென்ற பெண்கள் மானபங்கப்பட்டு, இழி நிலைக்குத் தள்ளப்படும் பெண்களின் பரிதாப நிலைக்கு விடுதலை தேட மாதர் இயக்கங்கள் முன் வரவேண்டும். நிறத்தின் பெயரால் ஆபிரிக்கப் பெண்கள் உலக ஆதிக்கம் செய்யும் நாடுகளில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதும் மாதர் விடுதலை இயக்கத்தை உலகம் பரந்த இயக்கமாக மாற்றி வருகிற ஒரு சம்பவமாகும்.

ஆணாதிக்கம், மத மூட நம்பிக்கைகள், சமுக கட்டுப்பாடுகள் என்னும் விலங்குகளால் இறுகப் பிணைந்துள்ள பெண்களின் உயிர் மூச்சை வெளிக் கொண்டு வந்து, இந்த விலங்குகளை உடைத்தெறிய உதவும் அனைத்து சக்திகளுடனும் கூட்டுச் சேர்ந்து, பேரியக்கமாக பெண்கள் விடுதலை இயக்கத்தை மாற்றி அமைத்து, துணிந்து வேலை



படிப்பகம்

www.padippakam.com

செய்யும் பெண்களை முன்னணிப்படையாக திரட்டுவதுதான் உண்மையான பெண்கள் விடுதலை என்ற தீப்பந்தத்தை உயர்த்திப் பிடித்து முன் செல்லும் ஒரே மார்க்கமாகும்.

அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களுடன் பெண் விடுதலைப் போராளிகளும், ஒன்று படாதவரை பெண்கள் விடுதலைக் குரல் உரிய இடத்தை எட்டப் போவதில்லை. சமூக விடுதலைக்கான மார்க்கமே அனைத்து ஒடுக்கு முறைக்கும் எதிரான மார்க்கம் என்பது பெண் ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்திற்கும் பொருந்தும். 1983ல் ஸ்ரீ லங்கா பேரினவாதிகள் ஆயுதப் படையின் பங்களிப்புடன் தமிழ் இனத்திற்கு எதிராக தொடுத்த இன ஒழிப்பு யுத்தம் விடுதலை இயக்கத்தில் பெருமளவு இளைஞர்களை மட்டுமல்ல இளம் பெண்களின் ஒரு பகுதியினரையும் கொண்டு வந்து சேர்த்ததுடன் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவையும் அந்தஸ்த்தையும் தேடித்தந்தது. அந்த நேரத்தில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் சேர்ந்து கல்வியிலும் கலையார்வத்திலும் மேல் வகுப்பில் முன்னணி வகித்த சோபா எனப்படும் மதிவதனி, காலப் போக்கில் ஈழ விடுதலை இயக்கத்தில் சேர்ந்து பெண் உரிமைக்காகப் போராடியதும் இன ஒழிப்பு தீவிரம் அடைந்தபொது ஆயுதம் ஏந்தி எதிரிக்கு எதிராக வீரத்துடன் போராடி தன் இன் உயிரை விடுதலைப் போருக்கு அர்பணித்த முதல் வீராங்கனை சோபா என்பது பெண் விடுதலைக்கு என்றும் உத்வேகம் எட்டும் செம்பதாகை என்பதை சர்வதேச பெண்கள் தினத்தில் நாம் நினைவு கூர்வோமாக.

ஆக்கங்கள்,விமர்சனங்கள், கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**SINTHANAI**
**ALBUCHWEG 8**
**7000 STUTTGART 1**
**WEST GERMANY**



படிப்பகம்

www.padippakam.com

# உருமாறிகள்

பருவம் தப்பிய
பருவக்காற்றின்
திசை மாறிய அனர்த்தங்கள்,
உருமாறிய மனிதனின்
கருவூலச் சிதைவுகள்
இங்கே-
வீதிகள் விலகி ஓடுகின்ற
விந்தைகளால்
மலைகள்
இடம் பெயர்ந்துகொண்டிருக்கின்றன,

நெருப்புக்
குளிர்ந்துகொண்டிருக்கும்போது
பனித்துளிகள்
உடலை சுடுகின்றன,
கலிகாலம்
ஒரு கற்காலத்தைப் பெற்றெடுத்திருக்கின்றது
காட்டுமிராண்டித்தனத்திற்கு
இப்போது நாகரீகம் என்று இன்னொரு பெயர்
பகுத்தறிவு
பலரை இங்கே பகிஷ்கரிப்பு செய்துவிட்டதால்
நாலும் இரண்டும் பேதம் இழந்து
இப்போது
நடுத்தெருவுக்கு வந்துவிட்டன.

-அருந்ததி

நன்றி:தமிழ்முரசு



படிப்பகம்

www.padippakam.com

# 7வது இலக்கியச் சந்திப்பு

ஐரோப்பாவில் வெளிவரும் தமிழ்சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுக்களும், ஆக்கதாரர்களும், வாசகர்களும் கலந்து கொள்ளும் இலக்கியச்சந்திப்பு, தனது ஏழாவது சந்திப்பை 07.04.90 அன்று மேற்கு ஜேர்மன் கிறேபெல்ட் நகரில் நிறைவு செய்து கொண்டது.

வெகுஜனம், தூண்டில், நமதுகுரல், புதுமை, தளிர், தென்றல், மண், தேனீ, சிறுவர் அமுதம், அக்னி, சிந்தனை, அஆஇ, பள்ளம், கவடுகள் ஆகிய சஞ்சிகைகள் கலந்து கொண்டன.

இம்முறைச் சந்திப்பில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை நூறு தொடக்கம் நூற்றிப்பத்து வரையிருந்தது.

நிகழ்ச்சி காலை 10 மணியளவில் திருநாவுக்கரசுவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது. கலந்து கொண்டவர்களின் சுயஅறிமுகத்தின் பின், நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்த சில நிகழ்ச்சிகளில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாக செயற்குழுவால் தெரிவிக்கப்பட்டது.

"மேற்கு ஜேர்மனியில் வெளிவரும் தமிழ்ச் சஞ்சிகைகளின் ஆக்கங்களில் பெண்ணிலைவாதக் கருத்துகள்" என்ற தலைப்பில் அடுத்து இடம்பெற்ற நிகழ்ச்சியில் இன்பராணி, கமலா ஆகியோர் தமது கட்டுரைகளை வாசித்தனர். இதனைத் தொடர்ந்து விமர்சனங்களும், கருத்துகளும் பறிமாறப்பட்டன. தேனீர் இடைவேளைக்குப் பின் தொடர்ந்த வாசகர் விமர்சனங்களில் பலர் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இதன் பின்னர் சஞ்சிகை ஆசிரியர்களாலும் ஆக்கதாரர்களாலும் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கப்பட்டது.

மதியபோசன இடைவேளையைத் தொடர்ந்து, இந்தியாவில் நிலவும் பெண்ணொடுக்குமுறைகள் பற்றி ஜேர்மன் தொலைக்காட்சி நிலையத்தால் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சியொன்று காண்பிக்கப்பட்டது. இதன் பின்னர்" மேற்கு ஜேர்மன் தமிழ் சஞ்சிகைளில் வெளியான



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதைகளில் சமூகப்பார்வை" என்னும் நிகழ்ச்சியில் சுகன், உமா ஆகியோர் சிறுகதைகள் பற்றிய தமது விமர்சனக்கட்டுரைகளை வாசித்தனர். வாசகர்களின் விமர்சனங்களும் தொடர்ந்தன.

தமிழ்ப்புதுக்கவிதையின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும், ஈழத்தமிழரின் புகலிட இலக்கியத்தில் புதுக்கவிதையின் வளர்ச்சியையும் பற்றியும் "புதுக்கவிதை–புதிய பிரக்ஞைகள்" என்ற தலைப்பின் கீழ் குமரன் உரை நிகழ்த்தினார்.

"பீலபெல்ட்" நாடகக் குழுவால் நடாத்தப்பட்ட "காலத்தின் சுவடுகள்" என்னும் பாரம்பரிய கலையம்சங்களை உள்ளடக்கிய இசைநாடகம் அனைவரினதும் கவனத்தை ஈர்த்தது.

இறுதி நிகழ்ச்சியாக "தேடலும் ஐக்கியமும்" பற்றி சுவடுகள் ஆசிரியர்குழுவைச் சேர்ந்த குமார் உரையாற்றினார்.

எட்டாவது இலக்கியச் சந்திப்பு எசன் நகரில் நடைபெறுமென முடிவுசெய்யப்பட்டு அதற்கான செயற்குழு தெரிவு செய்யப்பட்டதன் பின் அன்றைய நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.



## -ஒருபார்வை-

சந்துஷ்

நிகழ்ச்சிநிரல் மாற்றம் பற்றி நிகழ்ச்சி ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டது. முதலில் குறிப்படப்பட்டிருந்த இரண்டு நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்ச்சிக்குப் பதிலாக "மேற்கு ஜேர்மன் தமிழ் சஞ்சிகைகளில் வெளியான சிறுகதைகளில் சமுதாயப்பார்வை" என்னும் நிகழ்ச்சி சேர்க்கப்பட்டிருந்தது. சற்றுக் கனதியான இவ்விடயம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருப்பதை வாசகர்களுக்கு முன்னர் அறிவிக்கப்படாததாலோ என்னவோ மிகக் குறைந்தபேரே இந்நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டனர். நிகழ்ச்சி நிரல் மார்றம் பற்றி வாசகர்களுக்கு



படிப்பகம்

முன்னதாகவே அறிவித்திருக்க வேண்டியது செயற்குழுவின் கடமையாகும். இனி வரும் நிகழ்ச்சிகளில் இது கவனத்திற்கு எடுக்கப்படும் என்று நம்பலாம். "நொய்ஸ்" நகரில் நடைபெற்ற 3 வது இலக்கியச்சந்திப்பிலிருந்து, பெண்ணொடுக்குமுறை பற்றியும் பெண்ணிலைவாதம் பற்றியதுமான, நிகழ்ச்சிகள் தவறாமல் தொடர்ச்சியாக இடம் பெற்று வருவது(க்ருட்காட்டில் பிரத்தியேகமான நிகழ்ச்சியாக இது நடைபெறாவிட்டாலும் "ஆண்கள் விற்பனைக்கு" நாவல் விமர்சனத்தின் போது பெண்ணொடுக்குமுறை பற்றிய கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.) அதன் முன்னோக்கிய வளர்ச்சியையே காட்டுகின்றது. தவறாமல் இது இடம் பெற்று வருவதையிட்டு சிலரின் மறைமுக முகச்சுளிப்புகளின் இடையிலும் நடைபெற்று வருவதானது, இலக்கியச்சந்திப்பானது வெறும் பட்டிமன்ற மேடையாக அமைந்து விடாமல் சமூகப்பிரச்சனைகள் பற்றிய யதார்த்தபூர்வமான பார்வையையும் அவற்றிற்கான சரியான தீர்வுகளை நோக்கிய கருத்துப்பறிமாறல்களின்

தளமாகவும் பரிணமித்து வருவதைக் காட்டுகிறது.

இம்முறைச் சந்திப்பின் போது "மேற்கு ஜேர்மன் தமிழ் சஞ்சிகைகளில் பெண்ணிலைவாதக் கருத்துகள்" என்ற நிகழ்ச்சியில் கமலாவினால் வாசிக்கப்பட்ட கட்டுரை ஆழமாகவும் விரிவாகவும் இருந்தது. பல கட்டுரைகளை துணிச்சலான முறையில் விமர்சித்திருந்த இக் கட்டுரையாளர், இறுதியில் தனது பெயரைக் குறிப்பிடாமல் விட்டதுதான், விமர்சனம் என்ற பதத்திற்கே முரணாக அமைந்திருந்தது. சிலவேளைகளில் இக்கட்டுரை ஒன்றுக்கு மேற்பட்டவர்களின் கூட்டுமுயற்சியினால் உருவாகியிருக்கலாம், எது எப்படியிருப்பினும் பகிரங்கமாக வாசிக்கப்படுபவற்றின் ஆக்கதாரர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுவதே சிறந்ததாகும். பொதுவாக, வெளிவரும் சஞ்சிகைகளில் கூட பெயரும், விலாசமும் குறிப்பிடப்படாத விமர்சனங்களும், ஆக்கங்களும் பிரசுரிக்கப்படுவதில்லை. பெயர் குறிப்பிடப்படாதவற்றைப் பகிரங்கமாக வாசிப்பதை தவிர்த்துக்கொள்வது நல்லதாகும், ஏனெனில் இனி வருங்காலங்களில் அநாமேதயக் கடிதங்களைக் கூட வாசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இலக்கியச்சந்திப்பிற்கு ஏற்படலாமல்லவா?.

பெண் விடுதலைக்கான தனியான அமைப்புப்

பற்றிக்கலந்துரையாடப்பட்டபோது "....மத்தியதர வர்க்கத்திலுள்ள பெண்களால் போராடும் பெண்களுக்குத் தலைமை தாங்கமுடியாது ......." என்ற அலெக்கின் கருத்து பொருத்தமானதொன்றாகும். இவரது பேச்சு சில குறுக்கீடுகளால் இடைநிறுத்தப்பட்டது. "மத்தியதர வர்க்க பெண்களை விடவும் கீழ்மட்டத்திலுள்ள வேலை பார்க்கும் பெண்களிடத்திலேயே தமது விடுதலை பற்றிய போராட்ட உணர்வு அதிகமாக இருக்கும்" என்ற யதார்த்த உண்மையைக் குறிப்பிட்டார் தேவிகா.

பெண்களுக்கான அமைப்பொன்றின் அவசியம் உணரப்படும் அதேவேளை, பெண்கள் எவ்வாறு அமைப்பாகலாம் என்பது பற்றி விரிவாக சிந்திக்கப்படாத வரை பெண் விடுதலை சம்பந்தமான சரியான பார்வை முழுமை பெற மாட்டாது என்பதுவும் உண்மையாகும்.

மேற்கு ஜேர்மன் தமிழ் சஞ்சிகைகளில் வெளியான சிறுகதைகளில் சமூகப்பார்வைபற்றிய விமர்சனங்களின் போது, தொழிலாளர்கள் ஒரு நிறுவனத்தில் செய்யும் "வேலைநிறுத்தம்", பொதுக்கோரிக்கைகளுக்காக பல நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் இணைந்து செய்யும் "பொதுவேலைநிறுத்தம்" என்ற பதங்களுக்கான விளக்கங்கள் பற்றி வாசகர் ஒருவரின் கருத்து வர்க்க அனுபவமில்லாத குழப்பத்தைக் காட்டியது. தொழிலாளர்கள் தமது வர்க்கப்போராட்டங்களுக்கு வைத்திருக்கும் பெயர்களை சில "புத்திஜீவிகள்" தமது சொற்சிலம்பங்களினால் கொச்சைப்படுத்தக் கூடாது.

ஒரு நிறுவனத்தில் உள்ள தொழிலாளர்கள், ஒரு தொழிலாளி வேலைநீக்கம் செய்யப்பட்டாலோ அல்லது அந்த நிறுவனத்தினால் தீர்க்கப்பட வேண்டிய கோரிக்கைகளுக்காகவோ, வேலைசெய்ய மறுத்து நடத்தும் போராட்டம் சாதாரண வேலைநிறுத்தம்.

இப்போராட்டங்கள் விரிவடையும் பொழுதும், சகல தொழிலாளர்களுக்கும் பொதுவான கோரிக்கைகள் மீதும் பல நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்கள் இணைந்து வேலைநிறுத்தம் செய்யும் பொழுது அது "பொதுவேலைநிறுத்தம்".

யாழ்ப்பாணத்தில் உள்ள பரந்தன் இரசாயன தொழிற்சாலைத் தொழிலாளர்கள் தமது தோழர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதற்கும்,

www.padippakam.com

தமது தொழிற்சாலையை மூட எடுத்த முயற்சிகளுக்கும் எதிராகவும், மற்றைய கோரிக்கைகளுக்குமாக (1982ல்) மாதக்கணக்கில் செய்த போராட்டம் வேலைநிறுத்தம்.

கொழும்புத்துறைமுகத்தில் ஏழு தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதற்காக துறைமுகத் தொழிலாளர்கள் மட்டும் சாதரண வேலைநிறுத்தம் செய்தனர். இது பயனளிக்காது போகவே சகல துறைமுகங்களிலுமுள்ள தொழிலாளர்கள், ஏற்றுமதி இறக்குமதி ஸ்தாபனங்கள், கூட்டுஸ்தாபனங்கள் ஆகியவற்றிலுள்ள சகல தொழிலாளர்களும் ஒரு மாதம் (1967 ஏப்ரல்) பொதுவேலைநிறுத்தம் செய்து கோரிக்கைகளை வென்றனர்.

இலங்கையில், 1947ல் தியாகி கந்தசாமி கொல்லப்பட்ட அரசாங்க ஊழியர் பொதுவேலைநிறுத்தம், 1980ல் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சோமபாலா' அரசாங்க குண்டர்களினால் அடித்துக் கொல்லப்பட்ட பின்பு, தமது கோரிக்கைகளுக்காக அரசாங்க ஊழியர்கள் செய்த பொதுவேலை நிறுத்தம், இங்கு(ஜேர்மனியில்) ஈ.ஜி.மெட்டால் 35 மணித்தியால வேலைக்காகச் செய்த

# "ஆண்ட பரம்பரை"

"ஆண்ட பரம்பரை"யாம்
யாரவர்கள்?
அவர்களுக்கும் எங்களுக்கும்
என்ன சம்பந்தம்?
மொழியின் பேராலும்
இனத்தின் பேராலும்
எங்களையும் அவர்களோடு
இணைத்துப் பேசுகிறார்களே!
ஒருவேளை நாங்களும்
அவர்களுள்
அடங்குவோமோ?
இல்லையே!

எங்கள் கரங்களின் உழைப்பு
செம்மண் தரைகளில்
உடைமை வர்க்கத்தால்
சுரண்டப்பட்டன!
எங்கள் மனிதத் தேவைகள்
சுரண்டும் மிருகங்களால்
அழிக்கப்பட்டன!
எங்கள் ஆத்ம விருப்பங்கள்
ஆதிக்க நகங்களால்
கீறிக் கீறிக் கிழிக்கப்பட்டன!
எங்கள் பள்ளிச் சிறுவர்கள்
பாடசாலையில்



படிப்பகம்

பொதுவேலைநிறுத்தம் - இவைதான் வர்க்க வரலாறுகள் தரும் சில உதாரணங்கள்.

தமது போராட்டங்களுக்கு என்ன பெயர் வைப்பது என்பதை போராடும் வர்க்கங்கள் தீர்மானிக்கட்டும்.

குமாரனின் "புதுக்கவிதை-புதியபிரக்ஞைகள்" சிறப்பாக அமைந்திருந்தது. எனினும், புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் புகலிட இலக்கியத்தில் புதுக்கவிதையின் வளர்ச்சியையும் போக்கையும் பற்றி விளக்க முற்படும் பொழுது, "துருவச்சுவடுகள்" உடன் சேர்த்து இக்கவிதைத் தொகுதியில் இடம் பெறாத, பல்வேறு ஐரோப்பிய தமிழ் சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகளையும் குறிப்பிட்டிருந்திருக்கலாம்.

இசை நாடகமாக அமைந்திருந்த "காலத்தின் சுவடுகள்" பாரம்பரியக்கலை வடிவங்களை உள்ளடக்கியிருந்தது. பாரம்பரியக்கலை வடிவங்களில் சமகாலப்பிரச்சனைகளை விளக்கியிருக்கும் இக்கலைஞர்களின் முயற்சி முன்மாதிரியானது. பார்வையாளரின் மனத்தை தன்னுடன் ஒன்றிணைய வைக்கும் பாரம்பரியக் கலைவடிவங்களுக்குரிய சிறப்புத்தன்மை

எழுந்து நின்றே படித்துக் கொண்டன(ர்)!

"சங்கிலியன்"களும்
"பண்டார வன்னியர்"களும்
என்ன நம்மைப்போல்
உழைக்க நிலமில்லாதவர்களா?
இருக்க வீடில்லாதவர்களா?
உண்ண உணவில்லாதவர்களா?
இல்லை!
இவர்கள் எல்லாமிருந்தவர்கள்
எல்லாமுள்ள வர்க்கத்தின்
பிரதிநிதிகள்
ஆனால் நாங்கள்
"இழப்பதற்கு எதுவுமற்றவர்"கள்
எனவே; இந்தப் பாரம்பரைக்கும்
நமக்கும் என்ன சம்பந்தம்?

நாங்கள் "கூலி"யின் பேராலும்
சாதியின் பேராலும்
சமுதாயத்தின் கீழ்தட்டில்
அடுக்கப்பட்டவர்கள்
ஆம் நாம் ஒடுக்கப்பட்டவர்கள்!
நாங்கள் கலட்டித் தரையிலும்
சுடலை மேட்டிலும்
உவர் நிலத்திலும் ஒதுக்குப்
புறத்திலும்

www.padippakam.com

பார்வையாளர் வாழ்கின்ற சமகால நிகழ்வுகளை அலசும்பொழுது உயிர் பெற்றுவிடுகிறது. நாடகத்தின் அமைப்பில் கூட ஒருவித சீர்திருத்தப் போக்கைக் காணக்கூடியதாகவிருந்தது. நாடகத்தின் பாத்திரங்கள், பார்வையாளர் வரிசையிலிருந்து மேடையில் பிரசன்னமாவது, நாடகத்தின் இறுதியில் பார்வையாளர்களில் ஒருவரை பாத்திரமாக நடிக்க வைத்திருப்பது போன்றவை நாடகத்திற்கும் பார்வையாளர்களுக்குமிடையில் நிலவும் "கவரை" இல்லாமல் செய்துவிடுகின்றன.

"வடிவம்" என்ற ரீதியில் இந்நாடகம் வளர்ச்சிப்போக்கைக் கண்டிருந்தது. அதன் உள்ளடகத்திலுங்கூட சமூகவமைப்பில் நிலவும் சாதியொடுக்குமுறையினை விளக்கும் கருவைக்கொண்டிருந்தது. இருந்துங்கூட சாதியமைப்பைபற்றியும் அதன் கொடுமைகளையும் காட்டுவதற்கு "குறுநிலமன்னர்களின்" கதைகளையும், "ஆண்டபரம்பரம்பரையின்" வரலாறுகளையும் உதவிக்கு அழைத்திருப்பது வேடிக்கையானது. குறுநில மன்னர்களின் வரலாறுகளை மக்களின் வரலாறுகள் என்று காட்டுவது, இம்மன்னர்களின் கீழ்

*வாழச் சொல்லி*
*நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்!*

*யாரால்? யாரால்? யாரால்?*
*ஆண்ட பரம்பரையால்.*
*நிலப்பிரபுத்துவ மன்னர்கள் முதல்*
*நிறம் வெளுத்த "எம்.பி"க்கள் வரை*
*அரசுக்கட்டில் அமர்ந்திருந்த*
*ஆண்ட பரம்பரையால்!*

*ஆம்! தோழர்களே!*
*இவர்களுக்கும் நமக்கும் சம்பந்தமில்லை*
*இவர்களோடு நமக்கு சமரசமுமில்லை!*
*மீண்டும் இவர்கள் ஆளுவதற்காக*
*மாண்டு போக எங்களை வரட்டாம்!*

*வாருங்கள் தோழர்களே*
*மாற்றி எழுதுவோம்*
*இவர்கள் வகுத்த தீர்ப்பினை*
*இனிமேல் ஆளப்போவது*
*ஆண்ட பரம்பரையல்ல*



படிப்பகம்

ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றை அப்படியே மறைப்பதேயாகும். இந்த "சங்கிலியன்" களினதும் "பண்டாரவன்னியன்" களினதும் காலங்களிலேயே சாதியமைப்பு முறையானது இறுக்கமாக்கப்பட்டது.

அன்று தொடக்கம் இன்று வரை "ஆண்டபரம்பரை"க்கதைகள் எதைப் பாதுகாப்பதற்காக கலைவடிவங்களில் இடம்பெற்று வருகின்றன என்பதை இக்கலைஞர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆளப்பட்ட பரம்பரை

ஆதிக்க வேர்களை அறுத்து வீசவும்
அடக்கு முறைப் பற்களை
பிடுங்கி எறியவும்
சாதிக்க வல்ல சக்தியே எழுக!
இனிமேல் ஆளப்போவது
ஆண்ட பரம்பரையல்ல
ஆளப்பட்ட பரம்பரை....

— சூரியன்.

பழைய வடிவத்துக்குள்ளே புதிய கருத்துக்களை அடக்குதல், புதிய வடிவத்துக்குள்ளே பழையதுகளை அடக்குதல், வடிவத்திற்காகவே கருப்பொருளை வலிந்து அமைத்தல், கருப் பொருளுக்காகவே வடிவத்தை அமைத்தல் இப்படி இலக்கியப் பிறப்புகள் பலவகைப்படும். இவைகளில் இயல்புக்கு மீறாத வடிவமும், அந்த வடிவத்துக்குள்ளே தேவைப்பட்ட கருப்பொருளும் இடம் பிடித்துவிடுமெனில் அதுவே சிறப்பான இலக்கியப் பிறப்பாகும். இதற்கு மாறாக புதிய வடிவங்களை மட்டும் மனதில் உருவகித்துக்கொண்டு அந்த வடிவத்துக்குள்ளே தேவையற்றதும் பரிணாம வளர்ச்சியை மறுப்பதுமான இருப்பியல்வாதத்தை நிலைகொள்ள வைக்க வார்த்தை ஜால மகுடி வித்தைகாட்டி, வாசகனை தலை சுழல வைக்கும் புதிய வடிவவாதிகளிடமிருந்து நான் வேறுபட்டு நிற்கிறேன். நான் புதிய வடிவம் என்று ஆக்கிக் கொண்டதெல்லாம் சமூக வாழ்க்கையின் இயல்பான நடைமுறைகளையே!

"கானல்" என்ற நாவலில் கே.டானியல் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதி.



# மேற்கு ஜேர்மனியில் தமிழ் சிறுகதைகள்

- விமர்சனப்பார்வை உமா -

மேற்குஜெர்மனியிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகளில் பலவிதமான சிறுகதைகள் வெளியாகியிருக்கின்றன. ஒவ்வொரு சிறுகதையும் வித்தியாசமான கோணங்களில் படைக்கப்பட்டும், வெவ்வேறு எழுத்தாளர்கள் வாழும் சமூகத்தின் தன்மைகள், அவர்கள் வாழும் நிலை, எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், ஏமாற்றங்கள் என்பவற்றை பிரதிபலிக்கின்றன. ஒரு புறத்தில், சற்றும் யதார்த்தத்திற்கு ஒவ்வாத வெறுமனே தென்னிந்திய திரைப்படப் பாதிப்புப் பெற்ற சிறுகதைகளும், மறு புறத்தில், எமது நாட்டின் நிலைமைகளையும், சமூகத்தின் வெளிப்பாடுகளையும் தாங்கி நிற்கும் சமூக பிரக்ஞையுள்ள சிறுகதைகளும் வெளிவந்துள்ளன.



www.padippakam.com

இக் கட்டுரையில், மேற்கு ஜேர்மனியில் வெளியாகும் சஞ்சிகைகளில், இரண்டுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர்களின் கதைகளே விமர்சனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன.

முதலில் எமது சொந்த நாட்டைவிட்டு முற்றிலும் வேறுபட்ட அந்நிய சூழலில் வாழுபவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் தாக்கங்கள், அனுபவங்கள் என்பவற்றை சித்தரிக்கும் கதைகளை வரிசைப்படுத்தலாம்.

ஏக்கங்கள்- நா.நிருபா -தூண்டில்

இக்கதையில் சொந்தநாட்டிலிருந்து வந்து மேற்குஜேர்மனியில் அரசியல் தஞ்சம்கோரி, இங்குள்ள பாடசாலையொன்றில் கல்விகற்கும் வாசுகி எனும் பெண், இங்குள்ள வித்தியாசமான சூழ்நிலையில் பாடசாலையில் எவ்வாறு பாதிக்கப்படுகிறாள், அவள் அனுபவிக்கும், எதிர்நோக்கும் பிரச்சனைகள் - இறந்தகாலத்தில், தனது சொந்த நாட்டில், கல்வி கற்கும் காலத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள், என்பன ஏக்கங்களாக ச்சித்தரிக்கப்படுகின்றன.

இக்கதையில் இங்குள்ள பாடசாலைகளின் அமைப்புமுறை, ஒரு அன்னிய மாணவி பாடசாலைகளில் எவ்வாறு நடத்தப்படுவாள் என்பன யதார்த்தமாக காட்டப்பட்டுள்ளது.

மேற்கு ஜேர்மனிக்கு அழைத்து வரப்பட்ட சிறுவர்களின் வாழ்க்கை சூன்யமாகத்தான் இருக்கின்றது. பல பெற்றோர்கள் விளைவுகளைச் சிந்திக்காமல் தமது சுயநலத்திற்காக மட்டும் நிரந்தர இடம் தேடி அலையும் வேளையில், பிள்ளைகளின் மனநிலை எவ்வாறு பாதிக்கப்படுகின்றதெனவும், முற்றிலும் வேறுபட்ட அபிவிருத்தியடைந்த சமூகச்சூழ்நிலையில் வளர்க்கப்பட்டவர்களுக்கிடையில், ஒரு அபிவிருத்தியடையாத சமுகத்தில் கட்டுப்பாடுகளுடன் வளர்க்கப்பட்ட பெண்ணொருவள் நிச்சயம் பல இன்னல்களை எதிர்நோக்குவாள்.



படிப்பகம்

www.padippakam.com

"சிறு வயதிலிருந்தே வளர்ந்து வந்த சில மரபுக்கட்டுப்பாடுகளினின்று வெளியே வரவும் இயலாமல் அளவுக்கு மீறிய சுதந்திரக்கூட்டுக்குள் நுழையவும் விரும்பாமல் வாசுகி திண்டாடிக்கொண்டிருந்தாள்." எனும் வரிகள் உண்மையானவை.

அவள் இங்கு பலவிதமான முரண்பாடுகளைச் சந்திக்கின்றாள். அங்கு வாழ்ந்த வாழ்க்கைமுறை சரியா? இங்கு இவர்கள் வாழும் வாழ்க்கைமுறை சரியா? என்ற கேள்விகள் எல்லா இளம் வயதினரது மனங்களிலும் எழுப்பப்பட்டு, ஒரு குழப்பமான சூழ்நிலையை உருவாக்குகின்றன.

பொதுவாக இலங்கைப் பாடசாலைகளில் அளவுக்கு மீறின கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதை "அடிமைத்தனங்களுக்கு இங்கேயே அத்திவாரங்கள் இடப்படுகின்றன" எனக் கூறும் போது , எமது சமூகஅமைப்பிலுள்ள பாடசாலைகளில் "பாதுகாக்கப்பட்டு" வரும் சில கட்டுப்பாடுகள், குற்றம் செய்யாமலேயே ஆசிரியர்களுக்கு பயந்து வாழும் தன்மை, அவசியமில்லாத மரியாதை வழக்கங்கள் என்பவற்றை நன்றாகவே சாடுகிறார் நிருபா.

இங்கு, பாடசாலையிலிருந்து வீட்டிற்குச் சென்றால் அங்கு அவளின் பெற்றோர்களின் மேலும் சமூகப்படிகளில் ஏறுவதற்காக, நாடு விட்டு நாடுபாயும் நடவடிக்கைகள் - அவளை எதிர்நோக்குகின்றன.

நிருபாவினால் எழுதப்பட்ட மற்றைய கதைகளுடன் பார்க்குமிடத்தில், இக் கதை வித்தியாசமானதாகவும், அவரின் வளர்ச்சியையும் தெரிவிக்கும் விதத்திலும் அமைந்துள்ளது.

அத்திவாரமில்லாத கட்டிடங்கள்- துளசி- தூண்டில்

இலங்கையிலிருந்து மேற்குஜெர்மனிக்கு அழைத்து வரப்பட்ட விநோத் என்ற சிறுவனுக்கு ஏற்படும் பாதிப்புகளினால் அவனது மனநிலை எவ்வாறு பாதிக்கப்படுகின்றது, பெற்றோர்களின் கவலையீனம், என்பவற்றையே இக்கதை சித்தரிக்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இக்கதையில் இங்கு பாடசாலைக்குச் செல்லும் ஒரு சிறுவன் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும், அவனது சிறுவயது எதிர்பார்ப்புக்களும், மிகவும் யதார்த்தமாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. நிருபாவின் "ஏக்கங்கள்" என்ற சிறுகதையில் இடம்பெற்ற வாசகி என்ற பாத்திரத்திற்கு தனது இறந்தகாலம், அனுபவங்கள் என்பன இன்னும் நினைவிலேயே இருக்கின்றது. ஆனால் வினோத்தோ மிகவும் சிறுவயதிலேயே இங்கு அழைத்து வரப்பட்டதால் அவனது சிறுபிராயத்தில் அனுபவிக்கவேண்டியவற்றையே அவன் முழுமையாக அனுபவிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. "எப்போதோ பார்த்துப் பழகிய கறுப்பு முகங்களும், உருண்டு விளையாடிய புழுதி மண்ணும், குத்தி உப்புப் போட்டு தின்ற பச்சை மாங்காயும் மங்கலான ஞாபகங்களாக இருந்தன. அவை நிஜமா அல்லது இப்போதிருக்கும் நிலைதான் நிரந்தரமா என்று அவனால் புரிந்துகொள்ளமுடியவில்லை. அதற்கான எந்த சாத்தியமும் அவனுக்கில்லை." இங்கு வாழும் அதிகமான சிறுவர்களின் நிலையே இதுதான். சுதந்திரமாக நண்பர்களுடன் உரையாடி, உலவவேண்டிய வயதில், இங்கு நாலு சுவருக்குள் கட்டாய வாழ்க்கை வாழவேண்டியவர்களாகவுள்ளனர். தங்களையறியாமலேயே அவர்களில் ஒரு தாழ்வுமனப்பான்மை குடிகொள்கிறது. நிஜத்திற்கும், போலிக்கும் உள்ள வித்தியாசத்திலேயே பல குழப்பங்களுடன் அவர்களது வாழ்க்கை ஆரம்பிக்கின்றது.

"தாய்நாட்டில் பிறந்து, வழமையான சிறுவர் பிராயத்தை அனுபவித்துக் கொண்டிருந்தவன் அந்த சந்தோஷங்களிலிருந்து கட்டாயமாகப் பிரித்தெடுக்கப்பட்டு அந்நிய தேசத்திற்கு இழுத்து வரப்பட்டிருக்கிறான். மற்றவர்களைப் பொறுத்தவரை விசயம்



படிப்பகம்

www.padippakam.com

இவ்வளவுதான்."

"ஆனால் வினோத்துக்கோ இழந்தவைகள் ஏராளம். தாய்மொழி, உற்ற நண்பர்கள், உறவினர்கள், சுதந்திரம் என்று நீளமான பட்டியலை அவன் இழந்திருந்தான். பலாத்காரமாக அந்நிய இடத்தில் இறக்கி விடப்பட்டிருக்கிறான். இதற்கு தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியது அவனுக்குள்ள கட்டாயம்."

இங்கு அழைத்து வருவதில் மட்டும் அக்கறையாக இருக்கும் பெற்றோர்கள், பின்பு அவர்களது சுதந்திரம் பறிபோவதையிட்டு எந்தவித கவலையில்லால் தாம் வாழும் வாழ்க்கை முறையையே தமது பிள்ளைகளுக்கு திணிக்கிறார்கள். அவர்கள் கட்டாய வாழ்க்கைக்கு தள்ளப்படுகிறார்கள். இங்கு வாழும் இளம்வயதினரை ஒரு இருண்ட எதிர்காலம் எதிர்நோக்கி நிற்கின்றது. ஐரோப்பாவில் பரவலாக காணப்படும் நிறவெறி, இனவாதம் என்பன அவர்களின் இளம் சந்ததியினருக்கும் ஊட்டப்படுகின்றது. இதன் விளைவுகளால் வருங்காலம் மிகவும் அபாயகரமாகவேயிருக்கும்.

"அந்த சிறுவனுக்கு தான் அகப்பட்டிருக்கும் சின்ன வட்டம் தான் தெரிகிறது. மற்றவர்களும் பெரிய வட்டத்திற்குள்தான் அகப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவன் தெரிந்து கொள்ளவில்லை."

என்ற வசனம் பல அர்த்தங்களைத் தருகின்றது. இங்கு நிலவும் இனவாதத்தின் ஆபத்தையும் குறிக்கின்றது. மேலும் இங்குள்ள தமிழர்களின் யதார்த்தமான, சமுகபடிகளில் ஏறுவதை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு, கனவுலகில் சஞ்சரிக்கும் தன்மையையும் காட்டுகின்றது.

நாளைய சமுதாய உறுப்பினர்களைத் தயார் செய்து, அவர்களின் உளவிருத்திக்கு அத்திவாரமிடும் பலவற்றை இழந்து நிற்பதால் வினோத்துக்கு அத்திவாரமேயில்லாமல் போய்விட்டதென மிகவும் தெளிவாகக் கூறப்படுகின்றது. மேற்கு ஜேர்மனியில் எழுதப்பட்ட சிறந்த சிறுகதைகளில் இதுவும் ஒன்று.



படிப்பகம்

www.padippakam.com

தெளிவு - விக்னா பாக்கியநாதன் - ஏலையா

இச்சிறுகதையில் அன்னிய சூழ்நிலையில் கல்விகற்கும் ப்ரியா என்ற சிறுமி பாடசாலையில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றியே எழுதப்பட்டுள்ளது.

இச்சிறுகதையிலும் முன்னைய இரு சிறுகதைகள் போல் இங்கு அன்னிய நாட்டவருக்கு எதிராக நிலவும் இனவாதத்தால் பாடசாலைகளிலும் எவ்வாறு வேறுநாட்டு மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என சித்தரித்தாலும், இறுதியாக இனவாதம் பற்றிச் சில தெளிவின்மைகள் தமிழ்மக்கள் மத்தியில் நிலவுகின்றதென்ற நோக்கில், "ப்ரியா கெட்டிக்கார பிள்ளையென்றபடியால் தான் நான் அவவை வாசிக்க விடவில்லை" என நியாயப்படுத்தியிருப்பது, இங்கு யதார்த்தமாகவிருக்கும் இனவாதத்தை மறைப்பதாகவும் , மறுப்பதாகவும் உள்ளது.

அகதிகள்- கோவை றைதன்- தூண்டில்

வெளிநாடொன்றில் தஞ்சம்கோரியிருக்கும் ஒரு அகதியின் மனநிலையையும், சொந்த மண்ணை விட்டு வெளியேறியதும் அம்மண்ணை மறப்பவர்கள் மேலான வெறுப்பையும் இக்கதை காட்டுகின்றது.

சொந்த நாட்டிலிருந்து பல எதிர்பார்ப்புகளுடன் , காணிகளை விற்றும், கடன் வாங்கியும் வெளிநாடுகளுக்கு வருவதும் , பின் வாழும் காலம் வரை அக்கடனைத் தீர்ப்பதற்காக ஓயாது இரவும் பகலும் உழைப்பதுவும், காலம் செல்ல அந்த வாழ்க்கையே நிரந்தரமென நினைத்து கனவுலகில் மிதப்பதும், சொந்தநாட்டை மறப்பது அல்லது தாழ்வாக நோக்குதல் என்பவையே இங்குள்ள அகதிகளின் வாழ்க்கை.

"இருபத்துநான்கு வருடங்களாக தான் வாழ்ந்த நாட்டைவிட்டு இப்போது இங்கே வாழப் பழகுவது கஷ்டம் தான். அங்கே அகதிகளாகப்



படிப்பகம்

www.padippakam.com

பாடசாலையில் வாழுகின்ற சனத்துக்குச் செய்த உதவிகள், கேணியடியிலிருந்து நண்பர்களுடன் நாட்டுப்பிரச்சினைப் பற்றி விவாதித்த காலங்கள், இரவோடிரவாக போட்டிருந்த உடுப்புகளுடன் வீட்டைவிட்டு அகதியாக வாழ்ந்த காலங்கள், விமானங்கள் மேலால் குண்டு போட பதுங்கு குழிகளுக்குள் ஒருவருக்குப் பின்னால் ஒருவராகப் பாய்ந்து பதுங்கியிருந்த வாழ்வில் எத்தனை சிரமங்கள் இருந்தாலும், அங்கு இருந்த நிறைவு இங்கில்லை"

பிறந்ததிலிருந்து வளர்ந்த மண்ணிலிருக்கும் சுதந்திரமும், மனநிறைவும் ஒருபோதும் வேறெந்த நாட்டிலிருக்கும்போதும் கிடைக்காது என்ற யதார்த்தத்தையே இக்கூற்று காட்டி நிற்கின்றது.

"எனக்குத் தெரியும. இங்க வந்தவையில கனபேர் ரண்டு வகையான சிந்தனையில இருக்கினம். ஒரு வகையினர் நிரந்தரமாய் இங்கை வாழ்க்கையை அமைக்க வேண்டுமெண்டு விரும்பியினம், மற்ற வகையினர் பிரச்சனை தீர்ந்த பிறகு நாட்டுக்குப் போய் முதலாளி ஆகவேண்டுமெண்டு நினைக்கினம். உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கிற ஜீவன்களைப் பற்றி எந்த நினைப்புமில்லாமல் முதலாளி ஆகி இன்னும் சுரண்டுற எண்ணம்" எனும் வரிகள் முற்றிலும் உண்மையானவை. இது இங்கு வாழும் அனேகமானவர்களின் மனநிலையை பிரதிபலிக்கின்றது.

"அங்கு நாங்கள் வாழ்ந்ததும் அகதிகளாகத்தான். இங்கு நாங்கள் வாழுறதும் அகதிகளாகத்தான். ஆனால் இன்னொரு சிறப்பைக் கூட்டிக் கொடுக்கலாம். அகதிகளாக இவ்விடம் வந்து, இப்போது அகதி என்ற நிலை மறந்து, சொகுசாக வாழவேண்டும் என்ற நினைப்பிலே, தப்பி விட்டோம் என்ற சுயநல நினைப்புடன் வாழும் அகதிகள் நாங்கள்."

சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டவர்கள் அச்சம் நிறைந்த பயங்கர சூழலில் தொடர்ந்தும் இருப்பதோடு



படிப்பகம்

www.padippakam.com

வாழ்க்கையில் இழந்தவைகள் திரும்ப சீரமைப்பதற்காக மனங்களில் எழும் ஏக்கங்களுடன் தான் வாழ்கிறார்கள். ஆனால் இங்குள்ளவர்களோ அடையாளஅட்டையை புதுப்பிக்கும் நாளன்று மட்டும் அகதியென்பதை நினைவுகூர்ந்து, பின் பழையபடி அந்தஸ்த்தை உயர்த்தும் போட்டிகளிலும் , பணக்குவிப்பிலும் காலம் கழிக்கின்றனர்.

அப்பா கூட விமானநிலையத்தில் வைத்து "இங்கயிருந்து படிச்சப்போட்டு இவ்வளவுநாளும் வேலை ஒண்டும் எடுக்கேலாம இருக்கின்றாய். நாட்டுப்பிரச்சனையும் தீர்றதா தெரியேல. இவ்வளவு கஷ்டப்பட்டு உன்ன அனுப்பி வைக்கிறன். போய்க் கெதியில உழைச்ச, பட்ட கடனையும் அடைச்ச அங்க நல்ல மாப்பிள்ளையளாப் பார்த்து தங்கச்சியளைக் கூப்பிட்டுக் கட்டி வை" என்று சொல்லியிருக்கிறார்.

"ஓ.. அப்பா கூட எவ்வளவு புத்தியாய், எல்லாமே அந்நியப்பட்டு தங்கச்சிமாருக்குக்கூட எங்கட மண்ணில கலியாணம் செய்து வைக்க விரும்பாமல்..... அந்நிய மண்ணில வாழுற மாப்பிள்ளையள் பிழைக்கத்தெரிஞ்சவங்கள் எண்டு நினைக்கிறார் போல..."

இவ்வாக்கியங்கள் மத்தியதரவர்க்கத்தின் நிலையில்லாத தாமே ஒரு கனவுலகை சிருஷ்டித்து வைத்து வெளிநாடுகளில் பிள்ளைகளுக்கு மணம்முடித்து வைத்து தமது சமுக அந்தஸ்தை உயர்த்தும் யதார்த்தத்தை காட்டுகின்றது.

இக்கதையின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை உயிர்த்துடிப்பு இருக்கின்றது.

மனைவி இறக்குமதி - பார்த்திபன்- தேனீ

சுகந்தி என்பவள் மேற்கு ஜேர்மனியில் வாழும் சிறி என்பவரை மணம்முடிப்பதற்காக அனுப்பிவைக்கப்படுகிறாள். இங்கு வந்தபின் சிறியை மணம்முடிக்க மறுக்கின்றாள் என்பதே இக்கதை இதுபோல் இங்குள்ள உண்மையான நிலையறியாமல், அதிகளவு சீதனம் பேசி பலபெண்கள் முன்பின்



படிப்பகம்

அறிமுகமில்லாத ஆண்களை மணம்முடிப்பதற்காக பல வந்து குவிகின்றனர். மணம் முடித்தவுடன் நான்கு சுவருக்குள் அடைக்கப்பட்டு வாழ்நாள் பூராகவும் அடங்கி வாழவேண்டியவளாகவுள்ளாள் இதுவே யதார்த்தம். ஆனால் இக்கதையில் "நான் அரசியல்தஞ்சம் கோரித்தான் வந்தனான், கலியாணம் முடிக்கவில்லை" என மறுப்பு தெரிவிக்கப்படுகின்றது.

எப்போதும் பாத்திரங்கள் நிகழ்காலத்தில் உலவவேண்டும்.எதிர்காலமாற்றத்திற்காக அறைகூவல் விடுக்கவேண்டும்.இக்கூற்றுக்கு சுகந்தி பாத்திரம் பொருத்தமானதாகவிருக்கின்றது.

"நாட்டில எவ்வளவு பிரச்சினைகள் நடக்குது. அதுகளில் ஒண்டையும் சந்திக்காம, அதுகள் எதைப்பற்றியும் கவலைப்படாம, ஜேமனியில இருக்கிறன். ஜேமன் பாஸ்போர்ட் இருக்குது. அதால இரண்டுலட்சம் ரொக்கமா தா. வீடும் வேணும். ஜேமனிக்கு வாற செலவும் அதுவும் கிட்டத்தட்ட ஒருலட்சம் நாங்கதான் செலவழிக்கவேண்டும் என்டு ஈவிரக்கமில்லாமல் சொன்ன உங்களைக் கலியாணம் செய்யிற அளவிற்கு எனக்கு மூளை பழுதில்ல"

"ஒரு பொருளை இறக்குமதி செய்தால் அதற்குரிய கட்டணத்தையும், கொண்டுவாற கூலியையும் பொருளைப் பெறப்போகிறவனே செலுத்தவேண்டும், ஆனா நீங்க என்னை ஒரு பொருளாகக் கூட மதிக்கேல. உங்களைக் கலியாணம் செய்யிறதுக்கும், ஜேமனிக்கு வாறதுக்கும் நாங்கதான் செலவளிக்கவேணும் என்டு சொல்லுறியள். இவ்வளவு காசு செலவழிச்சு உங்களைக் கலியாணம் கட்டினால் அப்படியென்ன சுகம் கிடைக்கப்போகுது? எங்களைக் காசுசெலவழிக்க பண்ணியே நீங்கள் சுகம் தேடவேணும்?.........."

"இதையொண்டையும் யோசிக்காம, வெளிநாட்டில வசதியா இருக்கிற உங்களுக்கு கலியாணம் செய்ய ஊர் பொம்பிளையள் தேவை. அதுவும்

www.padippakam.com

வீடு வளவு, நகை, நட்டு, லட்ச லட்சமாயக் காசு, பிளைற்றுக்கு காசு எல்லாத்தோடையும். உண்மையா நீங்கள் என்ன நினைச்சுக் கொண்டிருக்கிறியள். நாட்டில ஆம்பிளையள் இல்லாததால் பொம்பிளையள் றோட்டு றோட்டா அலைஞ்சு கொண்டிருக்கினம். அவையளை சுகமா பேய்க்காட்டலாம் எண்ட திமிறிலதானே இப்படிச் செய்யிறியள். சில பொம்பிளையள் மோட்டுத்தனமாக உங்கட காலில வந்துவிழுந்தபடியாத்தானே விளையாடுறியள். நீங்களெல்லாம் ஊருக்கு வந்து அங்கிருக்கிற சனத்தையும் நாசமாக்காம இஞ்ச இருக்கிறது நல்லது போலத்தான் இருக்கிறது."

மேலுள்ள வாக்கியங்களின்படி சாதாரணமான பெண்கள் போலல்லாது, தனது முடிவை தானே எடுக்ககூடிய நிலையிலிருப்பது சுகந்தியை வித்தியாசமாக காட்டுகிறது.

ஒருசிலரின் மனமாற்றங்களால் எந்தவிதமான பயனுமில்லாவிட்டாலும், பெண்கள் தங்களை தாங்களே தாழ்வாக உணரும் நிலைக்கு தள்ளுபவர்களுக்கும், பெண் என்றால் கலியாணம் செய்யவேண்டும் என்ற நிலமைக்கும், எவ்வளவு காசு கொடுத்துச் சரி, எங்கேயாவது மணம்முடித்துக் கொடுத்தால் சரி என இருக்கும் பெற்றோருக்கும் இக்கதை சவாலாக அமைகிறது.

## தண்டனை – நிருபா – நமதுகுரல்

மே.ஜேர்மனியில் வாழும் நந்தகோபலன் தனது மனைவி கிருபானந்தியை விவாகரத்து செய்துவிட்டு, ஜேர்மன் பெண்ணொருவளை மணம்முடிக்கமுடிவு செய்கிறான். இதற்குப்பதிலாக அவன் மனைவி அவனை மாடியிலிருந்து வீழ்த்தி கொலைசெய்கிறாள்.

இக்கதையின் ஆரம்பப்பகுதியில்

"பெண்களே தங்களை அடிமைப்படுத்திக்கொள்கிறார்கள். அதை உணர்ந்து கொள்ளாமலேயே சிலர் செயற்பட்டுவருகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அந்தப் பெண்களில் கிருபானந்தியும் ஒருத்தி தான்." என இன்று பெண்கள் தாம் ஒடுக்கப்படுவதாக உணராத தன்மையை சரியாக குறிப்பிடுகிறார். ஆனால் இறுதியில் கணவனை கொலை செய்து பிரச்சனைக்கு முடிவுகாண்கிறாள்.

"நந்தகோபாலன் போன்ற ஆண்கள் இந்த உலகத்தில் வாழவே கூடாது. இவனுக்கு என்னைப் போன்ற பெண்ணால் தான் தண்டனை அளிக்கப்படவேண்டும்"

..............

"தான் கொடுத்த தண்டனை, பெண்களின் உரிமை பறிபோகும் ஒரு சிலநிகழ்வுகளுக்கு பதிலடி; இதில் இருந்து பெறப்படும் தீர்ப்பு பொறுப்பற்ற ஆண்வர்க்கத்தையும் சிந்திக்க வைக்கவேண்டும்!"

கொலை செய்வதால் எந்த பிரச்சனைக்கும் தீர்வு காணமுடியாது. அடிப்படை காரணிகளை ஆராயாது, தனிநபர் கொலைகளால் பெண்களுக்கு விடுதலை கிடைத்து விடாது.

நியாயம் புரிகிறது- விக்னா பாக்கியநாதன்- ஏலையா

ஜெயச்சந்திரன்-ரேணுகா மே.ஜேர்மனியில் வாழும் கணவன் மனைவி. மாலை நடக்கவிருக்கும் திருமணம் ஒன்றிற்காக ஆயத்தமாகிறார்கள். மனைவி அதிகப்படியான நகைகளை அணிந்திருக்கிறாள். நகைகள் அதிகபடியாக அணிவதை விமர்சித்து ஒரு எழுதப்பட்டிருந்த கட்டுரை ஒன்றை கணவன் வாசித்து மனைவிக்கு கூற, அவள் எல்லாவற்றையும் கழற்றிவிட்டு ஒரு சோடி காப்புடனும், ஒரு சங்கிலியுடனும் திருமணத்திற்குச்செல்கின்றாள்.

இத்தகைய மேல்மட்டத்தவர்களின் மனமாற்றங்களில் எந்தவித பயனுமில்லை. மேல்மட்டத்தில் நின்றுகொண்டு, நகைகள்பற்றி எழுதிக்கொண்டிருப்பது, உண்மையான பிரச்சனைகளிலிருந்து நழுவி திசை திருப்புவதாக அமைகின்றது.



படிப்பகம்

ஒரு தொழிலாளியும், ஒரு தொழிலாளியும்- பார்த்திபன்- தூண்டில்

மேற்கு ஜேர்மனியில் வேலை பார்க்கும் உதயன் என்பவரின் செயற்பாடுகளையும், எண்ணங்களையும் இக்கதை சித்தரிக்கின்றது.

இக்கதையில் சிறுகதைக்குரிய அம்சங்கள், நடை என்பன நன்றாகவிருந்தாலும், பார்த்திபனின் மற்றைய பாத்திரங்களிலிருக்கும் தெளிவில்லாமல், இப்பாத்திரத்தில் சற்று குழப்பமாகவிருக்கின்றது.

ஆரம்பத்திலிருந்து உதயன் பார்ப்பவற்றையெல்லாம் மார்க்ஸியக்கண்ணுடன் பார்ப்பதால் அதன் கொடூரம் தெரிந்தது என குறிப்பிடப்படுகின்றது. எந்த விடயத்தையும் யதார்த்தத்துடன் உற்றுப்பார்க்காமல் எதற்கு எடுத்தாலும் மார்க்ஸியச் சொற்பதங்களை மட்டும் தெரிந்துகொண்டு அவற்றைப் பிரயோகித்து நடைமுறை வாழ்வுடன் ஒட்டாமல் வாழ்வது வெறும் தீவிரவாதமே. அடிப்படைமாற்றத்திற்காக எந்த பங்களிப்பையுமே அளிக்காமல் வெறும் புத்தக அரசியல் செய்வது கலபம். உண்மையை, அதன் கொடூரத்தை, ஒரு பிரச்சனையின் விளைவுகளை சரியாக பார்போமானால் அதுவே நிஜம்.

ஓரிடத்தில் வேலைநிறுத்தம் நடைபெறும்போது, அதற்காக மற்றைய இடங்களில் வேலைநிறுத்தம் நடைபெறாததிற்கு அரசியல்வறுமை தான் காரணமென்று முதலில் குறிப்பிடப்பட்டு பின்னர் இறுதியில் சுயநலம் தான் குறிப்பிடப்பட்டிருப்பது தவறானதேயாகும். ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒரு அமைப்பு ரீதியாக அந்தந்த நிலையின் அத்தியாவசியத்திற்கேற்பவே வேலைநிறுத்தங்கள் நடைபெறுகின்றன. வேலைநிலத்தங்களால் முதாலாளிமாரும் பாதிப்படைகிறார்கள். அதேசமயம்

தொழிலாளர்களும் பாதிக்கப்படுகிறார்கள். எல்லாத் தொழிலாளர்களது பொது பிரச்சனைகளுக்கும், அவர்களின் பொது கோரிக்கைகளுக்குமே பொது வேலைநிறுத்தங்கள் நடாத்தப்படுகின்றன. உதாரணத்திற்கு கண்ணாடித்தொழிற்சாலையில் கையுறை வேண்டுமென்ற கோரிக்கைக்கு அவர்கள் மட்டும் தான் வேலைநிறுத்தம் செய்யமுடியும். அதைவிடுத்து எல்லாவற்றுக்கும் பொது வேலைநிறுத்தம் என்றால் அது தீவிரத்தன்மையாகவே தெரிகிறது. எல்லாவற்றையுமே மார்க்ஸியக்கண்ணாடியால் பார்க்கும் உதயனுக்கு இது புரியவில்லை.

உழைக்கும் மக்களால் தான் அடிப்படைமாற்றத்திற்காக போராடமுடியுமென்றும், அவர்களுக்குத்தான் அந்த உணர்விருக்கும் என சரியாக குறிப்பிடும் பார்த்திபன்' தொழிலாளர்களை அரசியல் மயப்படுத்துவது புத்திஜீவிகளின் கடமைகளாகவிருந்தாலும், " எங்களுக்கே விளங்கவில்லையெண்டால், ஒரு நேரச்சாப்பாட்டை மட்டும் குறியாகயிருக்கும் அவர்களுக்கு எப்படி விளங்கும் என கூறுவது தவறு. மத்தியதரவர்க்கத்திலிருந்து கொண்டு புத்தக மூலம் எல்லாவற்றையும் அறிந்து கொள்பவர்களின் குணாம்சத்திலிருந்து வாழ்வின் அடிப்படையிலேயே அவர்களுக்கிருக்கும் வர்க்கரீதியான உணர்வுக்கு நிச்சயம் வித்தியாசம் இருக்கும்.

சமூகவிஞ்ஞானத்தை படிப்பதால் மட்டும் உணர்வு ஏற்படாது. வாழ்க்கைமுறை தான் உணர்வுகளை தீர்மானிக்கிறதேயன்றி உணர்வுகள் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில்லை. இக்கதையில் சற்று பிரச்சார வாடையடிப்பதனால் கதைக்கருவில் உயிர்துடிப்பு குறைந்துவிடுகின்றது.

உணர்ச்சிகள் இல்லையடி பாப்பா- யதார்த்தனன்- வெகுஜனம்

இரு இயக்கங்களுக்கிடையில் நடைபெற்ற இயக்க மோதல்களின்போது ஒரு இயக்கத்தின் ஆதரவாளனாகவிருந்த ஸ்ரீராமை தேடி மற்றைய இயக்கத்தினர் வருகிறார்கள். அவ்வேளையில் உயிர்தப்புவதற்காக மனைவி, குழந்தையுடன் மலக்கிடங்குக்குள் ஒளிகின்றார்கள். தேடி வந்தவர்கள் சென்றபின் வெளியில் வரும்போது அவர்களின் குழந்தை இறக்கின்றது.

இக்கதை வித்தியாசமான கருவைக் கொண்டுள்ளது. தமிழர்களின் உரிமைகளை மீட்டெடுக்க போராட புறப்பட்டு, பாதிவழியில் நோக்கை கைவிட்டு சகோதரர்களை கொலை செய்யமுற்பட்ட துயரமான நிகழ்வின் ஒரு பகுதியை இக்கதை கருவாகக் கொண்டுள்ளது.

இவர்கள் மலக்கிடங்கிலிருந்து வெளியில் வரும்போது மணம் தாங்கமுடியாமல் மூக்கை பொத்துகிறார்கள். சமூகத்தில் நிகழும் சீர்கேடுகளை எதிரிகளை அப்படியே பாதுகாத்து அவற்றால் ஏற்பட்ட மணத்திற்காக மட்டும் மூக்கைப் பொத்தும் நமது சமூகத்தை சித்தரிக்கின்றது.

அவர்கள் வெளியில் வரும்போது , குழந்தை தன் மூச்சை நிறுத்தியிருந்தது. எல்லோரும் மூக்கை பொத்திகொண்டார்கள் என முடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதன்பின்பு முன்பிருந்த பயங்கரமான சூழ்நிலை திடீரென மாறி, பிரச்சாரம் செய்ய முற்பட்டிருப்பது யதார்த்தத்திற்கு ஒவ்வாததாக அமைகின்றது.

கண்ணுக்குத் தெரிகிறதா?- செம்பிரியா- வெகுஜனம்

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை வடபகுதியை சேர்ந்த ஒரு ஆண் திருமணம் முடிப்பதால் உண்டாகும் எதிர்ப்புகளை இக்கதை தாங்கிநிற்கின்றது.

www.padippakam.com

புதியதொரு கருகையாளப்பட்டிருக்கின்றது. யாழ்பாணத்தவர்களின் தம்மைவிட மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற குணாம்சத்தை சுட்டிக்காட்டுகின்றது. குடும்பத்தில் ஏற்படும் சண்டைகளில் அரசியல் கருத்துக்கள் பரிமாறப்பட்டிருப்பது ஒருவித பிரச்சாரத் தன்மையாகவேயிருக்கின்றது.

( ஏழாவது இலக்கியச்சந்திப்பின் (7.4.1990) போது வாசிக்கப்பட்ட இக் கட்டுரை, விரிவாக்கப்பட்டு இங்கு தரப்பட்டுள்ளது.)

சிந்தனையில் வெளியாகும் ஒப்பமிடப்பட்ட ஆக்கங்களின் கருத்துக்கள் அவற்றை ஆக்கியோரின் சுதந்திரமான கருத்துக்களேயாகும்.

- ஆசிரியர் குழு.

# பெண்கள் சந்திப்பு

மேற்கு ஜெர்மனியில் வாழும், பெண்கள் சந்தித்து தங்கள் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளும் முகமாக முதன்முதலாக ஹேர்ண, பெண்கள்வட்டத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட பெண்கள் சந்திப்பொன்று 17.03.1990 அன்று ஹேர்ண நகரில் நடைபெற்றது. இச்சந்திப்பில் ஜேர்மனியில் இயங்கும் மகளிர் அமைப்புகள் உட்பட 25 பெண்கள் கலந்துகொண்டனர். இரண்டாவது பெண்கள் சந்திப்பு ஹேர்ண நகரில் 12.05.1990 அன்று நடைபெற்றது. இச்சந்திப்பில் 19 பெண்கள் கலந்து கொண்டனர்.

"பெண்ணின் குரல் " பத்திரிகையில் கமங்களா- சிவரமணியால் எழுதப்பட்ட" எங்கள் சமூகமும் பெண்களும்" என்ற கட்டுரை வாசிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

"பெண்கள் ஒன்று கூடுவது ஏன் அவசியம்?" என்ற விடயத்தின் கீழ் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இறுதியாக ஒரு செயற்குழு தெரிவு செய்யப்பட்டதுடன் அடுத்த சந்திப்பு ஆவணி மாதம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

உமா



படிப்பகம்

# இந்துசமுத்திரத்தின் மத்தியில்

இன்று இலங்கையில் நடப்பவை என்ன?

அன்று இந்து சமுத்திரத்தின் முத்து என்று வர்ணிக்கப் பட்ட இலங்கை, இன்று தென்னாசியாவில் கொலைஞர்களின் நவீன சுவர்க்கமாக மாறி விட்டது.

1983க்கும் 87இற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் 15,000இற்கும் அதிகமான தமிழ் பேசும் பொதுமக்கள் இந்த "சுவர்க்கத்தில்" பலியெடுக்கப்பட்டுள்ளனர். இதில் 3000இற்கும் அதிகமானவர்கள் போராளி இளைஞர்கள் ஆவர். 1987இன் பின் இத்தீவு முழுவதிலும் உள்ள அனைத்து இனக் குழுக்களையுஞ் சேர்ந்த பொதுமக்களில் கொல்லப்படுபவர்களின் தொகை ஒரு லட்சத்திற்கு மேலாகி விட்டது.

வீட்டில் வைத்தோ, வீதியில் வைத்தோ, அடையாளந் தெரியாதவர்களினால் பிடிக்கப்பட்டு பலாத்காரமாகக் கொண்டு செல்லப்படும் யுவதியோ, இளைஞனோ, தாயோ தந்தையோ 24 மணிநேரத்திற்குள் அடையாளங் காண முடியாமல் கருகிய நிலையில் பிணங்களாக வீதியோரங்களிலும், பாலங்களின் கீழும், ஆறுகளிலும், மாயானங்களிலும் கண்டெடுக்கப்படுகின்றன. இவர்கள் இவ்வாறாக பிணங்களாவதற்கு முன் வதைமுகாம்களில் நடப்பவை மிகக் கொடூரமானவை....

பொலிஸாருக்குத் தேவையான தகவல்களை கொடுக்கும் வரை(எதிலும் சம்பந்தப்படாதவராக இருந்தாலும்) ஒவ்வொரு அங்கமும் அணுவணுவாகச் சித்திரவதைக்குட்படுத்தப்படும் "வதைமுகாம் வழமை" நாள்தோறும் அமுலில் இருக்கிறது.

நிர்வாணமாக்கப்பட்ட உடலில் சிகரெட்டால் சுடுவதிலிருந்து, குண்டூசிகளை நகஇடைவெளிகளில் ஏற்றிய பின் நகத்தைப் பிடுங்கி விடுதல், தலை கீழாகக் கட்டித்

## ஒரு இயமலோகம்

–பிரட்சில்வா

(தமிழில் காவிதாஸ்)

www.padippakam.com

தொங்கவிட்டுக் கீழே நெருப்பைக் கொழுத்திவிடுதல், அல்லது மிளகாய்த்தூளால் நிரப்பப்பட்ட சாக்குப் பைகளிற்குள் முகத்தை அமிழ்த்துதல், மின்சாரத்தை உடலினுள் பாய்ச்சுதல், எஸ்.லோன் குழாயை மலவாசலினுள் செலுத்தி முள்ளுக்கம்பியை உட்செலுத்துதல், வெட்டப்பட்ட கால்களில் உப்பைத் தடவி விடுதல்....இவற்றையெல்லாம் அனுபவித்தபின் (உயிருடன் இருந்தால்) கொல்லப்பட்டு, எரியூட்டப்பட்டு வீதிகளில் எறியப்படுகின்றனர்.

இலங்கையில் நிலவும் இந்த அரச பயங்கரவாதம், நேற்று இன்று நடைபெற்று வரும் ஒன்றல்ல. இவற்றிற்குப் பின்னணியில் 13 ஆண்டுகளிற்கும் மேலாக ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினைப் பற்றியும், அதன் தலைமைகளின் கொள்கைகளையும், அதன் நடவடிக்கைகளுக்கெதிரான எதிர்க்கட்சிகளினதும், அமைப்புகளினதும் நடவடிக்கைகளையும் ஆராய்வதன் மூலம் இவற்றின் பின்னணியைத் தெரிந்து கொள்ளலாம்.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல்களின்போது "முன்னைய கூட்டரசாங்கத்தின் பொருளாதாரச் சீர்கேடுகளை நிவர்த்தி செய்து திறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல் படுத்துவது" என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதான பிரசாரமாகவிருந்தது. இது ஐ.தே.க புதிதாகக் கண்டுபிடித்தவொன்றல்ல. முன்பு நிலவிய பொருளாதாரக் குழப்பங்களுக்குப் பரிகாரமாக ஏகாதிபத்திய நாடுகளினாலும், உலக வங்கியினாலும், சர்வதேச நிதி நிறுவனங்களினாலும் முன்வைக்கப்பட்ட தீர்வே இந்தத் திறந்த பொருளாதாரக் கொள்கையாகும். (இன்று தட்சரின் பிரித்தானிய அரசாங்கமும், கிழக்கைரோப்பிய நாடுகளும் சோவியத்நாடும், சீனாவிலும் பொருளாதாரப்பிரச்சனைகளுக்குத் தீர்வாக திறந்தபொருளாதாரக் கொள்கையையே முன்வைக்கின்றன.) தன்னுடைய பதவியைத்தக்க வைத்துக் கொள்வதற்காக "திறந்த பொருளாதாரக் கொள்கை"யைத்தவிர வேறெந்த முறையையும் ஜே. ஆரினால் கடைப்பிடிக்க முடியவில்லை. ஆனால் இந்த வழியானது, ஏகாதிபத்தியங்களினதும், முதலாளித்துவங்களினதும், பல்தேசியக் கம்பெனிகளினதும் நலன்களைப் பேணுமே தவிர சாதாரணப் பொது மக்களினது தேவைகளையோ, நலன்களையோ



படிப்பகம்

www.padippakam.com

எந்தவிதத்திலும் பூர்த்திசெய்யப்போவதில்லை என்பது ஜே.ஆர் அறியாதிருந்தவொன்றல்ல. இதனால் ஏற்படக்கூடிய மக்களின் எதிர்ப்புகளைச் சகலவிதங்களினாலும் அடக்குவதற்கான ஆயத்தங்களை தனது ஆட்சியின் ஆரம்பத்திலேயே செய்து வைத்தார். இதன் முதல்படியாக ஐக்கிய தேசியக் கட்சி, ஜே. ஆரினால் மறுசீரமைக்கப்பட்டது. கட்சியிலிருந்த மிதவாதக் கொள்கையுடையவர்கள் நீக்கப்பட்டு, குண்டர்கள் சேர்க்கப்பட்டார்கள். 1977 தேர்தல்களின் பின் எதிர்கட்சிகளுக்கும், தமிழ் பொதுமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், மாணவர்களுக்கும், பெண்களுக்கும், மதகுருமார்களுக்கும், புத்திஜீவிகளுக்கும், நீதிபதிகளுக்கும் எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறை நடவடிக்கைகளுக்கு இந்த குண்டர் அமைச்சர்களே காரணகர்த்தாக்களாக இருந்தனர்.

வடக்கு-கிழக்குப் பகுதிகள் தவிர ஏனைய பகுதிகளில் வாழும் சகல இனக்குழுக்களையும் "சமாளித்து" தனது ஆட்சியைத் தொடரக்கூடிய சாத்தியக் கூறுகள் ஐ.தே.க அரசிற்கு இருந்தது.

அரசின் வன்முறைகளிற்கான முக்கிய காரணமாக அமைந்திருந்தது ஜே.வி.பி யின் நடவடிக்கைகள்தான் என்பதே என எதிர்க்கட்சிகளினதும், இடதுசாரிக்கட்சிகளினதும், மேலெழுந்தவாரியான எதிர்ப்பைத் தெரிவிக்கும் அமைப்புக்களினதும் பொதுமக்களினதும் பொதுவான அபிப்பிராயமாகவிருந்தது. இந்தப் "பயங்கரவாதம்" என்ற சொல்லின் பின்னால் மறைந்திருந்து, தமது "தேவை"களை நிறைவேற்றி வரும் பிரேமதாஸ அரசாங்கமும் அர்த்தமற்ற கொலைகளை நிகழ்த்துகின்ற போதும் முன்னைப்போலவே பாரம்பரிய இடதுசாரிக்கட்சிகள் செய்வதறியாது நிற்கின்றன.

ஜே.வி.பியினர் பிரேமதாஸவினால் அடக்கப்படுவதையிட்டு பாரம்பரிய இடதுசாரிக்கட்சிகளைச் சேர்ந்த சிலர் உள்ளூர மகிழ்ச்சியடைந்திருந்தாலும், இன்று ஜே.வி.பி அழிக்கப்பட்ட பின்னரும் கூட இடதுசாரிகள் மீதான பிரேமதாஸவின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடரப்படுவதையிட்டு இவர்களில் பலர் அதிருப்தியும், விரக்தியும் அடைந்துள்ளனர். நாட்டில், பெரும்பான்மை மக்களின் அதிருப்தியைப் பெற்றிருந்தும் கூட பிரேமதாஸ வெற்றியடைந்ததற்கான காரணமாகவிருந்தது ஜே.வி.பி



படிப்பகம்

www.padippakam.com



இவர்கள் இனி யுத்தம் முடிவடைந்து விட்டது என மகிழ்ச்சி தெரிவித்தனர். இதன் பலனாக அதுநாள்வரையும் ஐ. தே. க வினால் வளர்த்தெடுக்கப்பட்ட இனவாதத்தை எம்.ஈ.பி யும், ஜே. வி. பி யும் பயன்படுத்திக்கொண்டன. இதன்பின்னர், "தேசப்பிரேமி" எனப்பட்ட தேசியவாதமும், இந்திய எதிர்ப்புவாதமுமே இக்கட்சிகளின் முக்கிய சுலோகங்களாகவிருந்தன. இவர்களைத் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் இவர்களால் "இந்திய ஏஜென்டுகள்" என முத்திரை குத்தப்பட்டனர்.

மாணவர்கள் உட்பட பெரும்பான்மையான சிங்கள இளைஞர்கள் ஜே. வி. பிக்குப் பின்னால் அணிதிரண்டதற்கான பிரதான காரணமாக அமைந்தது இந்திய இலங்கை நாடுகளுக்கிடையிலான "சமாதான" ஒப்பந்தத்தைப் பற்றிய பூரணமான விளக்கங்களைக் கொடுக்கவும், பொதுமக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்கவும் பாரம்பரிய இடதுசாரிக்கட்சிகளினால் முடியாமல் போனதாலேயே ஆகும்.

"சமாதான" ஒப்பந்தத்தை ஆதரித்தன் மூலம் இவர்கள் அரசுடன் ஒத்துப் போனவர்கள் ஆனார்கள். இதைப் பாவித்துக்கொண்ட ஐ. தே. க வரச

யினரின் தவறு மாத்திரமல்ல.

1987 க்குப் பின் ஐ.தே.க மீது பொது மக்களின் அதிருப்தி நிலவிய காலங்களில் அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகளின் முன்னெடுப்புகளையும் செயற்பாடுகளையும் அவதானிக்கும் பொழுது இது நன்கு புலனாகும்.

1987 யூலையில் ஜே.ஆர்-ராஜிவ் ஒப்பந்தம் கைச்சாத்தாகியவுடன் தெற்கிலே சில இடதுசாரிக்கட்சிகள் அவ்வொப்பந்தத்தை ஆதரித்தன. இலங்கை-இந்திய முதலாளித்துவ அரசுகள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட இணக்கத்தை மறந்து



படிப்பகம்

www.padippakam.com

ஜே. வி. பி க்கு எதிரான வன்முறைகளையும் படுகொலைகளையும் பகிரங்கமாக நடைமுறைப் படுத்தியது.

ஒரு புறத்தில் சிதைந்து போன வாழ்க்கைத் தரத்தையும் , மறுபுறத்தில் அரசவடக்கு முறைகளிற்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்த சிங்கள மக்கள் அரசிற் கெதிரான தமிழ் மக்களுடன் இணைந்து போராட முடியாமல் இருந்தனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின் வடக்கிலும் ,தெற்கிலும் கட்சிகளுக்கிடையில் உருவாகவிருந்த ஒரு கூட்டு முன்னணி சிறிது காலத்திற்குப் பின் கை விடப்பட்டது. மாகாண சபைத் தேர்தல்களுக்காக வேறு ஒரு கூட்டு இவர்களால் உருவாக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

ஐக்கிய சோசலிச முன்னணி (யூ. எல். ஏ) மாகாண சபைத் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொண்டதன் மூலம், மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து கொண்டிருந்த ஐ. தே. க வை மீண்டும் பலம் பெறச் செய்தது. இதன் பின்னர் நடை பெற்ற இடைத் தேர்தல்களின் போது க. க நான்கு ஆசனங்களுக்காகப் போட்டியிட்டுத் தோற்றது.

ஐ. தே. க வின் அராஜகத்துடன் ஜே. வி பி மோதிக் கொண்டிருக்கும் நிலைமையில் தாம் வெற்றி பெறுவது நிச்சயம் என அவர்கள் நினைத்தனர். ஆனால் அவர்கள் நினைத்ததற்கு முரணாகவே ஜே. வி. பி யினரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. ஐ. தே. க வின் அராஜக அரசியலை முடிவுக்குக் கொண்டு வர, பாரம்பரியப் பாராளுமன்றக் கட்சிகளால் முடியாது என்பது இலற்றிலிருந்து தெளிவாகின்றது. இத்தகைய நிலைமையில் தாமே ஐ. தே. க அரசிற்கு எதிராக தனித்து நின்று போராடக்கூடிய ஒரே சக்தி என்ற அபிப்பிராயத்துடன் ஜே.வி. பி செயற்படத் தொடங்கியது. ஜே. வி. பி யினரின் நடவடிக்கைகளை "பாசிசவாதம்" என்று பாரம்பரியவிடதுசாரிக்கட்சிகள் தவறாக வர்ணித்தனர். இவர்களினதும் ஏனைய எதிர்க்கட்சிகளினதும் தவறான இக்கணிப்பீட்டினால், உண்மையான பாசிசமாகிய ஐ. தே. க அரசை இனங்காணத் தவறியது அரசிற்கும் பிரேமதாஸக் கூட்டத்திற்கும் சாதகமாகிப் போனது. அவர்கள் பாசித்தை அடக்குவதாகக் கூறிக் கொண்டே பாசித்தைக் கட்டவிழ்த்து விட்டிருந்தனர்.

வருங்காலத்தில் தமது அரசிற்கு



படிப்பகம்

www.padippakam.com

எதிராகச் செயற்படக்கூடிய அனைத்து சக்திகளையும் இல்லாது அழித்தொழித்து விடும் வேலைகளையே பிரேமதாஸ இன்று



மேற்கொண்டு வருகிறார்.

ஜே. வி. பி விட்ட தவறு என்ன?

தாம் மாத்திரமே ஒரேயொரு இடதுசாரிக் கட்சி எனவும் இலங்கைப் புரட்சியின் குத்தகைக்காரர்கள் தாமே என்பதுவுமே ஜே. வி. பி யினரின் அரசியல் நிலைப்பாடாகவிருந்தது. தம்மைத் தவிர்ந்த ஏனைய கட்சிகளையும் தனிமனிதர்களையும் துரோகிகளாலும், எதிர்ப்புரட்சியாளர்களாகவும் இனங்கண்டு தீர்த்துக் கட்டினர். இவர்களது இந்தக்கணிப்பீட்டிற்குக் இவர்களில் ஊறியிருந்த ஸ்டாலினிஸவாதமே காரணமாகவிருந்தது. ஜே. வி. பி தலைவரான விஜேவீரவின் அரசியல் வழிகாட்டிகளாக இருந்தவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களே. இத்தலைவர்கள் அன்று தொடக்கம் இன்று வரை போதித்து வரும் "ஒரு கட்சி"க் கொள்கையை மானசீகமாக நம்பிய விஜேவீர தமது இயக்க உறுப்பினர்களுக்கும் அதையே போதித்தார்

ஆனால் இன்று ஸ்டாலின் செய்தவையும், சொன்னவையும் சோவியத் யூனியனில் நிராகரிக்கப்பட்டு,மக்கள் தமக்கு விரும்பிய அரசியல் கட்சியைத் தெரிவு செய்யும் உரிமையை இன்று பெற்று விட்டனர். இலங்கையின்



படிப்பகம்

பாரம்பரியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையானது ஸ்டாலினின் செயற்பாடுகள் பற்றி ஒரு வசனமோ, விமர்சனமோ கூறாமல் இருப்பது போல், அவர்களின் போதனைகளைப் பின்பற்றிய விஜேவீரவும் தன்னுடைய தலைமைப் பதவி ஆசையால் "ஒரு கட்சி" க்கொள்கையை இறுகப் பிடித்துக் கொண்டார்.

சோசலிசப் புரட்சியென்பது ஒரு தனிமனிதராலோ, அன்றி ஒரு குழுவினாலோ ஏற்படுத்தக் கூடியவொன்றல்ல, பரந்துபட்ட மக்களின் விடுதலைக்காக மக்களால் மக்களின் கைகளில் அதிகாரங்களை பெறுவதன் மூலம் தான் அதை உருவாக்க முடியும் என்பதை இந்தக் "கம்யூனிஸ்ட்கள்" என்றைக்கும் கற்பிக்காததால் ஜே. வி. பி யினர் மக்களை அணிதிரட்டுவது பற்றி எப்பொழுதுமே சிந்திக்கவில்லை. அவர்கள் தொழிலாள வர்க்கத்தை அமைப்பாக்கிப் போராட்டவுணர்வூட்டாமல், அவர்களையும் "மக்கள்" என்று மாத்திரம் கணித்தனர். இலங்கைப் புரட்சியைச் செய்யக் கூடியவர்கள் மாணவர்களும், புத்திஜீவிகளும், கிராமத்து விவசாயிகளுமே என்று நம்பினார்கள்.

ஆனால் ஐ. தே. க வரசை தங்களின் கொள்கைப்படி, பல்கலைக்கழகங்களை மூடியும், ஏனைய மக்களினின்று அந்நியப் பட்ட செயற்பாடுகளின் மூலமும் தோற்கடிக்க முயன்று முடியாத கட்டத்தில் ஜே. வி. பி யின் தலமையானது தாம் முதலில் அணிதிரட்டத் தவறிய தொழிலாளர்களை பலாத்காரமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட வைத்தது. ஸ்டாலின் வாதிகளும், மாவோ வாதிகளும் ஏனைய "புரட்சிவாதி"களும் ஜே. வி. பி யினரின் அழிவிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது என்னவென்றால், இலங்கையைப் போன்ற ஒரு மூன்றாம் உலக நாட்டின் விமோசனமானது தொழிலாள வர்க்கத்தினால் முன்னெடுக்கப்படும் சோசலிசப் புரட்சியினால் மாத்திரமே சாத்தியமாகும் என்பதையேகும்.

மறுபுறத்தில் ஜே. வி. பி யின் "ஒரு கட்சி" கொள்கையினால் அது மற்றைய அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் வெகுஜனப் போராட்டங்களிலிருந்து அந்நியப்பட்டிருந்தது மாத்திரமின்றி அவற்றின் தலைவர்களையும், பொறுப்பாளர்களையுங் கொலை செய்ததன் மூலம் ஐ. தே. க அரசிற்கெதிராகப் போராடக் கூடியதாகவிருந்த மக்கள் சக்திகளை முடமாக்கியதால்,அவை ஆயுத

www.padippakam.com

பீதியில் "வேறுவழியின்றி" ஜே. வி. பி யின் கைகளில் தனியதிகாரத்தை ஒப்படைத்து விட்டு பார்வையாளர் வரிசையில் மௌனித்துவிட்டன.

வெகுஜனங்களுக்கிடையில் இந்த "மௌனத்தை" ப்பாவித்துக் கொண்ட ஜே. வி. பி யினர் தம்மை மக்கள் ஏற்றுக் கொண்டதாகக் கருதிக் கொண்டனர். அல்லது அவ்வாறு காட்டிக் கொண்டனர். இதனால் ஐ. தே. க விற்கெதிராக அனைத்து மக்கள் சக்திகளும் ஒன்றினையும் சந்தர்ப்பம் இல்லாமல் போனது. தமது "பலத்தை"ப் பற்றி அசாத்திய நம்பிக்கை வைத்திருந்த ஜே. வி. பியினரின் அடுத்த கட்ட நடவடிக்கையாக அமைந்தது அரசின் ஆயுத படையினரையும், அவர்களது குடும்ப அங்கத்தவர்களையும் கொலை செய்ததாகும்.

மக்கள் போராட்டங்களுக்கு அரச ஆயுத படையினரின் ஆதரவைப் பெற முடியும் என்ற கணிப்பீடு முற்றிலும் தவறானதாகும். இது வேறு நாடுகளில் சாத்தியப் பட்டிருக்கக் கூடியிருப்பினும் இலங்கையிலுள்ள அமைப்பு முறையில் இது முற்றிலும் சாத்தியமற்றவொன்றே. "தேசியச் சிந்தனை" என்ற நூலில் இக்கருத்தை வலியுறுத்தும் குணதாஸ அமரசேகரவின் "புதியகருத்தை" ஜே. வி. பி யினரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் போலும்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட பிரேமதாஸ-ரஞ்சன் குழுவினர் துரிதமாக தமது இராணுவ காரியங்களை முடுக்கி விட்டனர். இதனால் ஐ. தே. க விற்கெதிரான மக்களில் ஒரு பகுதியினர் கூட ஜே. வி. பி யினரை எதிர்க்கத் தொடங்கினர். அப்பொழுதும் மக்களின் வாய்கள் மூடப்பட்டிருந்தன.

ஜே. வி. பி யின் தலமை முற்றிலும் எதிர்பாராத வகையில் அதன் அழிவு அமைந்திருந்தது. ஆனால் பொதுமக்கள் பலியெடுக்கப்படுவது நிறுத்தப் படவில்லை. சுதந்திரக்கட்சியையும், இடதுசாரிக்கட்சிகளையுஞ் சேர்ந்த ஆயிரக்கான உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் காணாமல் போகப் பண்ணப்பட்டார்கள்.

பிரேமதாஸ + ரஞ்சன் அரசின் பயங்கரவாதமானது தத்தமது வீட்டுவாசல்களிற்கும் வந்துவிட்டதென்ற பயவுணர்வு இக்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்டிருப்பது பாராளுமன்றத்தில் இவர்களது அங்கலாய்ப்புகளிருந்து தெரிந்தது. இவற்றிற்கு ரஞ்சன் குழுவினர் கொடுத்த பதில்



படிப்பகம்

"உங்களை வெளியில் வந்து கவனிக்கின்றோம்" என்பதாகும்.
ஜே.வி.பியினரை "பாசிசவாதிகள்" என்று முத்திரை குத்திய பழைய அரசியல் தலைவர்கள், இன்று பிரேமதாச ரஞ்சன் குழுவினரின் பயங்கரவாதத்திற்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.
சென்ற ஆண்டின் இறுதிப் பகுதியில் எதிர்க் கட்சிகள் முன்வைத்த காபந்து அரசிற்கான யோசனையிலிருந்து அவைகளின் அரசியல் அறிவீனம் தெளிவாகிறது.

ஐ. தே. க வுடன் தற்காலிக அரசொன்றை அமைக்க இக்கட்சிகள் முன்வந்ததற்கான காரணம், ஐ. தே. க விற்கெதிராக முகங்கொடுத்துப் போராட முடியாத இக்கட்சிகளின் இயலாமையையும் தமது நிலையை(இருப்பை) ஐ. தே. க வுடன் சேர்ந்தாவது சமாளித்து ஸ்திரப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே ஆகும்.
இன்று தொழிற்சங்கங்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு எதிரான சட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றது பிரேமதாச அரசு. இதற்கெதிராக தொழிற்சங்கங்களின் இணைந்த "ஒன்றியம்" ஒன்று அமைக்கப்பட்டிருந்தாலும் குறிப்பிடத்தக்க போராட்டங்களைச் செய்ய முடியாதவாறே யதார்த்தம் அமைந்திருந்தது.
இலங்கை முதலாளித்துவ ஆட்சிமுறையைத் தொடரும் பிரேமதாச தனது ஆட்சியைத் தொடர்வதற்கான ஆயத்தங்களையும் செய்து வருகிறார். அவர் தெற்கில் நடைபெற்ற மாட்சில்(Match) வெல்லும் வரை வடக்கில் உள்ள புலிகளை நண்பர்களாக்கிக் கொண்டார். அவரது அடுத்த ஆட்டம் புலிகளுடன் தானென்பது யாவரும் அறிந்த விடயமே.
ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களும், நாடுகளும் பிரேமதாசவிற்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளன. அவற்றிற்கான "நன்றிக்கடன்களை" பிரேமதாச இப்பொழுதே செய்யத் தொடங்கியுள்ளார்.
இலங்கையில் ஒரு ரூபாயின் மதிப்பு 21 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பொருட்களின் விலை வேகமாக உயர்ந்துள்ளது. மானியங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பிரேமதாசவினால் உருவாக்கப்பட்ட "ஜனசவிய" திட்டம் கூட திருத்தியமைப்படவிருக்கின்றது. ஜே. ஆர் செய்ததை விடவும் அதிகமாக மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளைத் திருப்திப் படுத்துவதற்காக பிரேமதாச தயாராகவுள்ளார்.
இத்தகைய சூழ்நிலையில்,

இ ல ங் கை யி ன் தொழிலாளவர்க்கமும்,ஒடுக்கப்பட் ம க் க ளு ம் அ ர சு ஒடுக்குமுறைகளிற்கெதிராகப் போராடி இத்தளைகளிலிருந்து விடுபட்டு தமது உரிமைகளை வென்றெடுப்பது எவ்வாறு ?
பிரேமதாஸ அரசின் போக்கிற்கு எதிராக அணிதிரளும் ஒரு பலமான சக்தி இன்று தென்னிலங்கை மக்களிடையில் இல்லை. வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் பேசும் மக்களின் அமைப்புக்களினாலேயே அரசுக்கெதிரான பலமான போராட்டங்களை முன்னெடுக்க முடியும். இந்த நிலையில் வடக்கு கிழக்கில் ஒடுக்கப்படும் மக்களுடன், தென்னிலங்கை ஒடுக்கப்படும் மக்களும் தொழிலாள வர்க்கமும் இ ணை ந் த ஐ க் கி ய முன்னணியினாலேயே பரந்துபட்ட மக்களின் விடிவைத்தரும் தீர்வுகளை உருவாக்க முடியும்.
இலங்கை முழுவதிலுமுள்ள மக்களின் ஜ ன நா ய க ம ற் று ம் மனிதவுரிமைகளையும், வாழும் உரிமைகளையும் வென்றெடுக்க உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் மக்களினதும் ஆதரவைப் பெறுவதற்காக ஜாதி, மத,நிற,தொழிற்சங்க,கட்சி பேதங்களற்ற அனைத்து மக்களின் ஒருங்கிணைவிற்காக அறைகூவல் விடுக்கப்படவேண்டும்.

## தலை, முடிவெட்டுதற்கா இருக்கு?

யார் யாரைக் கொன்றார்கள்
ஊரையெல்லாம் அழித்தார்கள்
நீர் போல செங்குருதி நிலத்தில் ஓட
போர் என்று சொல்லித் தம்
கூரையையே எரித்தார்கள்
வேரறுத்த மரமாகி
திசைமாறிப் புயல் வீச
செந்தணலுக்கஞ்சியதால்
கெஞ்சி இருந்து கொஞ்சி குலாவ
பட்டுப் பழுத்துப் பாடமாகக்கற்ற
பின்பும்
அழுது தொழுது அடிவருடி
குடி அழிந்து போனாலும் தலை
முடி வேண்டித் தவமிருக்கும்
இவர் தலை
முடி வெட்டுதற்கா இருக்கு?

---வே.ஆ.கப்பார்.

சு த ந் தி ர மா ன கருத்துப்பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

www.padippakam.com

# சிந்தனை



பங்குனி - வைகாசி 2/90 1990.

அழுக்குகள்-இங்கே
சோப்பு வேஷம் போட்டு
சுகாதாரம் பேசும்!

-வைரமுத்து.

உலகப்பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட தினமான மேதினம் நமது நாட்டில் "போலிகள்" பிரசாரதினமாக மாறிவிட்டது. சிறைக்கைதிகளை நாளெல்லாம் அடைத்து வைத்து விட்டு துவக்கு முனையில் ஒரு மணி நேரம் உலாவ விடுவது போல, முடிவில்லாத அவசர கால ஆட்சியில் ஒரு நாள் தொழிலாளரை ஊர்வலம் போக விடுகிறது, அரசாங்கம்.

அந்த நாளிலும் இலவச சினிமாப்படம், பாட்டுக்கச்சேரிகள், அலங்கார ஊர்திகள்..... இன்னும் தொழிலாளர்களை திசைமாற்றும் சதிகள் பல!

வருங்கால வர்க்கப் போராட்டத்திற்கு வழிசமைக்கும் திட்டங்கள் தீட்டும் நாளில் "சோப்பு வேசம் போட்ட அழுக்குகளின்" பேச்சுக்கள்.

நாட்டிற்காக காலாகாலமாக உழைத்து தமது வியர்வையையும் "இரத்தத்தையும் தேயிலையாக ஏற்றுமதி " செய்த தொழிலாளர்களை நாடுகடத்த முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் இந்த வேளையில், தொழிலாளர் துரோகி தொண்டமான் "அரச தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு



படிப்பகம்

பங்கு வேண்டும்" என்று புழுகுகிறார். பிறப்புரிமைப்பத்திரத்தை முழுமையாகப் பெறாத இந்த மக்களுக்கு "பங்கு பத்திரம்" என்ற வெறும் கடதாசியை கொடுக்க முயலுகிறார் இவர். சீரான வாழ்க்கையை நடத்தப் போதிய கூலியில்லாத இந்த மக்களுக்கு வங்கி சேமிப்புப்பற்றியும் மேதின உபதேசம் செய்திருக்கிறார் இந்த மனிதர்.

தோட்டத்தில் 'சின்ன துரை'யாக இருந்து முதலாளிகளிற்காக தொழிலாளிகளின் இரத்தத்தை அட்டைபோல உறிஞ்சிய ரஞ்சன் விஜயரத்ன, இன்று தோட்டத்துறை மந்திரியாகி மேதினசெய்தியில் தொழிலாளர்களை மிரட்டுகிறார். "உங்கள் மத்தியில் தீவிரவாதிகள் வளர்ந்தால் ஜே.வி.பி.யினரை அடக்கியது போல் அடக்குவதற்கு தயங்க மாட்டேன்". எதிர்கட்சியினரை கட்டுப்பொசுக்கும் "சனநாயக நீரோட்டத்தின்" பிரதம பேச்சாளர் அவர்தான்.

ஒரே ஒரு கட்சி. ஒரே ஒரு தொழிற்சங்கம் என்ற முறையில் வடக்கில் மேதினக் கொண்டாட்டம். 'இலங்கை வர்த்த ஊழியர்சங்கம்' யாழ்ப்பாணத்தில் இந்த வருடம் ஏன் ஊர்வலம் நடத்தவில்லை என்பதற்குக் கூறிய காரணம், அங்கு தற்பொழுது தொழிற்சங்க சுதந்திரம் எவ்வாறு பேணப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

நிதிமூலதனம் மத்தியதரவர்க்கத்திலுள்ள பிற்போக்கு சக்திகளின் உதவியுடன் பாசிச ஆட்சியை உருவாக்க முயற்சிக்கும் பொழுது அதற்கு முதல் எதிரியாக இருப்பது அமைப்பாகிய தொழிலாள வர்க்கம்தான் அந்த வர்க்கத்தின் போராட்ட சக்திகளை அழிப்பதற்காக, குட்டிமுதலாளித்துவ ஆடம்பரங்களுடன் "தொழிலாளர்களின் தோழர்களாக" வேடம் போட்டுக் கொணடு ஆயுதரீதியாக அழிவுவேலைகளைத் தொடருகின்றது.


நிதிமூலதனமற்ற நமது நாட்டில் அன்னிய மூலதனத்தின் அடிவருடிகள் அந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். அரசபயங்கரவாதிகளும் அதையண்டி

www.padippakam.com

வாழும் 'மாபியா'க் குழுக்களும் அன்னிய மூலதனத்தின் முகவர்கள் என்பதை தொழிலாளவர்க்க சக்திகள் இனம் காண வேண்டும்.

கோஷ்டி வாதம், குழுவாதம் ஆகியவற்றைக் களைந்து, சகல முற்போக்கு, தொழிலாள வர்க்க சக்திகளின் ஐக்கியப்பட்ட, நிதானமான செயற்பாடுகள் மூலமாகவே நாட்டில் ஜனநாயக சூழல்களை மீண்டும் உருவாக்க முடியும். இன்றைய தேவை தொழிலாள வர்க்க சக்திகளின் ஐக்கியம்.

## மே தினம் 1987 - யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணத்தில் 1987 மேதினம். இடதுசாரி ஐக்கிய முன்னணி ஊர்வலத்தில் தோழர்கள் விஜயானந்தனும் அண்ணாமலையும் தலைமைதாங்கி முன் செல்லுகின்றார்கள். அராஜகத்தின் குண்டுகள் பலிகொண்ட இந்த தோழர்களை இந்த மே தினத்தில் நினைவுகூருகின்றோம்.



படிப்பகம்

"தமிழீழத்தின் இறமையானது யாருக்கும் தாரைவார்த்துக் கொடுக்கப்படவில்லை" - ஆம், எந்தவொரு இயக்கத்திற்கோ அதன் தலைவருக்கோ அவ்விறமை தாரைவார்துக் கொடுக்கப்படவில்லை. மக்களுக்காக இயக்கங்களேயன்றி இயக்கங்களுக்காக மக்களில்லை.

தமிழ் மக்கள் சீராக சிந்தித்து வருங்கால வரலாற்றை உருவாக்குவதில் பங்கு கொள்ள வேண்டும். வரலாற்றில் ஒரு "அடோல்ப் கிட்லரும், பொல்பொட்டும்" தோன்றுவதற்குக் காரணம் மக்கள் அரசியல் விழிப்புடன் செயல்படத் தவறியதேயாகும். அந்த நிலை ஈழத்தமிழருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது.

*** சிந்தனை - இல:1/86 - மாசி 1986. ***

www.padippakam.com

# 8 வது இலக்கியச்சந்திப்பு

நடைபெறும் இடம் : எல்லன்

காலம் : ஜூன் 9ம் திகதி 1990.

சகல தொடர்புகளுக்கும்,
A.VELAUTHAM,

MITTWEG STR. 21,

4300 ESSEN 1.

****************************************

இலங்கையில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கெதிராக, 5.2.1990 இல் பொண் நகரில் இலங்கைத் தூதரகத்திற்கு முன்னால் மறியல் போராட்டமொன்றை வெற்றிகரமாக நடத்திய " இலங்கையர் குழு"வின் அடுத்த கூட்டம் பிரங்ப்பார்ட் நகரில் 26.06.1990ல் நடைபெறும்.
பங்கு கொள்ள விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

S.Bharathidasan,

BURG STR. 22,

6000 FRANKFURT 1

****************************************

படிப்பகம்

சிந்தனை இதழ்களைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்கு நீங்கள் செலுத்த வேண்டிய அன்பளிப்பு 20 டி.எம். மட்டுமேயாகும்.

